| வினாத்தொகுப்பு எண் : |
| --- |
| 4122 |

# CTSNI503GS/2025

பதிவு எண். | | | | | | | | |

**2025**

வினாத்தொகுப்பு

பகுதி-அ (தமிழ் தகுதித் தேர்வு) (பத்தாம் வகுப்புத் தரம்)
பகுதி-ஆ (பொது அறிவு) (பட்டப்படிப்புத் தரம்) மற்றும்
பகுதி-இ (திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு) (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **300**

**வினாக்களுக்கு விடையளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்**

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது.
2. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
3. இவ்வினாத்தொகுப்பு எண்ணை OMR விடைத்தாளில் குறிப்பதற்கு முன்பும் மற்றும் விடையளிக்கத் தொடங்கும் முன்பும், இவ்வினாத்தொகுப்பில் அனைத்து வினாக்களும் வரிசையாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாட்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினாத்தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத்தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D) மற்றும் (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், அவற்றுள் மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்ப வேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையினை அளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
6. வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவிதக் குறிப்புகளையும் எழுதக்கூடாது. குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள "Space for Rough Work" பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.
7. வினா வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ) (ம) (பகுதி-இ), ஆங்கில வடிவே இறுதியானது.
8. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது.
9. தேர்வு முடிந்தபின் உங்களுடைய விடைத்தாளை அறைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்த பின்னரே இவ்வினாத்தொகுப்பினை நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையத்தின் விருப்புரிமையின் அடிப்படையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL



⇆ [Turn over

SPACE FOR ROUGH WORK

## பகுதி-அ (தமிழ் தகுதித் தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

வினாக்கள் : 1–100 மொத்த மதிப்பெண்கள் : 150

Questions : 1–100 Total Marks : 150

1. பின்வருவனவற்றுள் வினைச் சொல்லைக் கண்டறிக.

   (A) சால
   (B) விளையாடு
   (C) காலை
   (D) கண்
   (E) விடை தெரியவில்லை

2. "இளமை" – என்னும் சொல்லின் எதிர்ச்சொல் யாது?

   (A) தனிமை
   (B) புதுமை
   (C) முதுமை
   (D) இனிமை
   (E) விடை தெரியவில்லை

3. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் : சரியான இணையைத் தேர்ந்தெடு

   (A) ஆதவன் – ஞாயிறு
   (B) ஆதவன் – விழிப்பு
   (C) ஆதவன் – திங்கள்
   (D) ஆதவன் – குபேரன்
   (E) விடை தெரியவில்லை

4. டவுன் பஸ்சில் மகளிர் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

   'டவுன் பஸ்' – இணையானத் தமிழ்ச்சொல் தேர்க.

   (A) பேருந்து
   (B) நகரப் பேருந்து
   (C) சிற்றுந்து
   (D) சரக்குந்து
   (E) விடை தெரியவில்லை

5. கண்டான் - வேர்ச்சொல்லைத் தருக.

(A) கண்ட  (B) காண்

(C) காணுதல்  (D) காட்சி

(E) விடை தெரியவில்லை

6. வேர்ச்சொல்லை கண்டறிக.

ஆட்டம்

(A) ஆட்டம் – ஆள்  (B) ஆட்டம் – ஆடு

(C) ஆட்டம் – ஆட்ட  (D) ஆட்டம் – ஆட்டு

(E) விடை தெரியவில்லை

7. ஒருமை பன்மை அறிந்து எழுதுக.

நெற்கதிர்கள் விளைந்தது – மாடுகள் மேய்ந்தது

(A) நெற்கதிர் விளைந்தன – மாடுகள் மேய்ந்தன

(B) நெற்கதிர்கள் விளைந்தன – மாடுகள் மேய்ந்தது

(C) நெற்கதிர்கள் விளைந்தன – மாடுகள் மேய்ந்தன

(D) நெற்கதிர்கள் விளைந்தது – மாடுகள் மேய்ந்தன

(E) விடை தெரியவில்லை

8. ஒருமை பன்மை பிழைகளைத் திருத்தி எழுதுக.

பூக்கள் மலர்ந்தது – வண்டுகள் பறந்தது

(A) பூக்கள் மலர்ந்தன – வண்டுகள் பறந்தன

(B) பூக்கள் மலர்ந்தது – வண்டு பறந்தன

(C) பூ மலர்ந்தன – வண்டுகள் பறந்தன

(D) பூ மலர்ந்தது - வண்டுகள் பறந்தது

(E) விடை தெரியவில்லை

9. பொருள் வேறுபாடு உணர்க.

மணம் – மனம்

(A) பூ மணம், உள்ளம்
(B) வாசனை, மாண்பு
(C) அன்பு, விருப்பு
(D) வாசனை, வண்ணம்
(E) விடை தெரியவில்லை

10. குறில் நெடில் மாற்றம் அறிந்து பொருள் வேறுபாடு தருக.

(மலை – மாலை)

(A) குன்று, நேரம்
(B) ஆறு, கடல்
(C) பூ மாலை, வயல்
(D) கண், பூ
(E) விடை தெரியவில்லை

11. பிழையான தொடரைக் கண்டறிக.

(A) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
(B) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
(C) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
(D) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
(E) விடை தெரியவில்லை

12. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக.

(A) கவ்வை – இளம்காய்
(B) கச்சல் – இளம்பாக்கு
(C) நுழாய் – வாழைப்பிஞ்சு
(D) கொழுந்தாடை – கரும்பின் நுனிப்பகுதி
(E) விடை தெரியவில்லை

13. பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் கண்டறிக.

'ஆத்தங்கரை'க்கு மேற்கே உள்ளது அந்த அழகிய சிற்றூர்.

(A) ஆற்றங்கரை
(B) ஆறு கரை
(C) ஆறின் கரை
(D) ஆற்றின் கரை
(E) விடை தெரியவில்லை

14. ஊர்ப்பெயரின் மரூஉவைத் தெரிவு செய்க.

சைதாப்பேட்டை

(A) சதப்பேட்டை
(B) சைதாப்பேட்ட
(C) சைதை
(D) சாதைப்பேட்டை
(E) விடை தெரியவில்லை

15. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

'தூசு' என்பதன் பொருள் __________

(A) நறுமணப்பொடி
(B) பட்டு
(C) பவளம்
(D) அழுக்கு
(E) விடை தெரியவில்லை

16. கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடு.

எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் __________

(A) உருவாக்கப்பட்டது
(B) செதுக்கப்பட்டது
(C) கட்டப்பட்டது
(D) எழுப்பப்பட்டது
(E) விடை தெரியவில்லை

17. சரியான பொருளைக் கண்டறிதல்.

முனிவு

(A) மலைந்து (B) கடினப்பாதை

(C) சினம் (D) வெற்றி

(E) விடை தெரியவில்லை

18. ஓரெழுத்து ஒரு மொழி

வீ

(A) ஆகாயம் (B) பறவை

(C) காற்று (D) கூர்மை

(E) விடை தெரியவில்லை

19. கேடு என்பதன் எதிர்ச்சொல் தருக.

(A) கெடுதல் (B) குற்றம்

(C) தாழ்வு (D) நலம்

(E) விடை தெரியவில்லை

20. முற்றுப்புள்ளி எங்கு இடம் பெறும்?

(A) வினையெச்சம்

(B) ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வரும் இடங்கள்

(C) சொற்றொடர் இறுதி

(D) ஒருவர் கூற்றை விளக்குதல்

(E) விடை தெரியவில்லை

21. யானையின் இளமைப்பெயர் கண்டறிக.

(A) குட்டி
(B) குருளை
(C) கன்று
(D) பிள்ளை
(E) விடை தெரியவில்லை

22. 'பாத்திமா நன்றாகத் தேர்வு எழுதினாள்' – இது எந்தக் காலத்தைக் குறிக்கிறது?

(A) இறந்தகாலம்
(B) எதிர்காலம்
(C) நிகழ்காலம்
(D) முக்காலம்
(E) விடை தெரியவில்லை

23. 'அவை வந்தன' என்னும் தொடர் எவ்வகை பாலை உணர்த்துகிறது?

(A) ஒன்றன்பால்
(B) பலர்பால்
(C) பலவின்பால்
(D) ஆண்பால்
(E) விடை தெரியவில்லை

24. இரு திணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள்

(A) முருகன், கண்ணன்
(B) குழந்தை, கதிரவன்
(C) மாணவன், மாணவி
(D) ஆசிரியர், ஆசிரியை
(E) விடை தெரியவில்லை

25. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளன
(B) காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளது
(C) காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்பு உள்ளன
(D) காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் இருக்கிறது
(E) விடை தெரியவில்லை

26. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக.

(A) புனையா ஓவியம் வரைவது வண்ணங்கள் பயன்படுத்தாமல்

(B) வண்ணங்கள் புனையா ஓவியம் வரைவது பயன்படுத்தாமல்

(C) வண்ணங்கள் பயன்படுத்தாமல் வரைவது புனையா ஓவியம்

(D) பயன்படுத்தாமல் புனையா ஓவியம் வரைவது வண்ணங்கள்

(E) விடை தெரியவில்லை

27. கலைச் சொல் தருக.

Autonomy

(A) வல்லாட்சி

(B) தன்னாட்சி

(C) மேற்குடி ஆட்சி

(D) தன்னியக்கம்

(E) விடை தெரியவில்லை

28. Adapter - என்ற சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்.

(A) தகவி

(B) ஊக்கி

(C) இயங்கு உறுப்பு

(D) இயக்க அடுக்கு

(E) விடை தெரியவில்லை

29. Cinematography என்பதன் கலைச்சொல்.

(A) ஒளிப்பதிவு

(B) ஒலி விளைவு

(C) திரையரங்க வளாகம்

(D) ஒளிக் கதிர்

(E) விடை தெரியவில்லை

30. நிகரான கலைச் சொல்லைக் கண்டறிக.

Head set

(A) தலைக்கோல்

(B) தலையணி மின் காட்சியமைவு

(C) செவிப்பொறி

(D) தலையணி ஒலி வாங்கி

(E) விடை தெரியவில்லை

31. கலைச்சொல் அறிக.

Prediction

(A) நுட்பம்
(B) முன்கணிப்பு
(C) துல்லியம்
(D) பின்னறிதல்
(E) விடை தெரியவில்லை

32. கலைச்சொல்லைத் தேர்வு செய்க.

Palmtop

(A) தொடர் இணைப்புக் கணிப்பொறி
(B) மடிக் கணிப்பொறி
(C) கையகக் கணிப்பொறி
(D) மேசைக் கணிப்பொறி
(E) விடை தெரியவில்லை

33. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) சாதனைப் பெண் திட்டம்
(B) பட்டம் பெற்ற பெண் திட்டம்
(C) உயர் கல்வி திட்டம்
(D) புதுமைப் பெண் திட்டம்
(E) விடை தெரியவில்லை

34. பழமொழியின் பொருள் கண்டறிக.

உழைப்பின்றி ஊதியமில்லை

(A) உழைக்காதவனுக்கு ஊர் ஊதியம் தரும்
(B) மன்னருக்கும் ஊதியம் உண்டு
(C) உழைக்கிறவரே ஊதியம் பெறுவார்
(D) வெள்ளம் வரும் முன் அணை போட வேண்டும்
(E) விடை தெரியவில்லை

35. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) குதிரைக்கன்று
(B) தென்னங்குரும்பை
(C) சாவிக்கோவை
(D) கூரை இடு
(E) விடை தெரியவில்லை

36. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்வு செய்க.

உள்ளங்கை நெல்லிக் கனி

(A) தடையின்றி மிகுதியாக
(B) எளிதில் மனதில் பதிதல்
(C) வெளிப்படைத் தன்மை
(D) பயனற்ற செயல்
(E) விடை தெரியவில்லை

37. தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.

சிறுவயதில் நான் பார்த்த நிகழ்ச்சிகள் _______ என் மனதில் பதிந்தன.

(A) மழை முகம் காணாப் பயிர்போல
(B) தாமரை இலை நீர் போல
(C) பசு மரத்தாணி போல
(D) உள்ளங்கை நெல்லிக்கனி போல
(E) விடை தெரியவில்லை

38. உவமைகளால் விளக்கப்பெறும் பொருள்.

கண்ணும் கருத்தும்

(A) மனதில் நிறுத்துதல்
(B) கற்பனை செய்தல்
(C) கருத்தில் கொள்ளுதல்
(D) பயனுள்ள செயல்
(E) விடை தெரியவில்லை

39. தமிழில் மொழிபெயர்க்கவும்:

Habeas Corpus

(A) தகவல் அறியும் உரிமை
(B) அடிப்படை உரிமையியல் மனு
(C) நிறுவனச் சட்டம்
(D) ஆட்கொணர்வு மனு
(E) விடை தெரியவில்லை

40. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிந்து எழுதுக.

'Poverty'

(A) சிறுமை
(B) கடமை
(C) பொதுவுடைமை
(D) வறுமை
(E) விடை தெரியவில்லை

41. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.

'டெலிமெட்ரி' (Telemetry) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத் தேர்க

(A) தொலைவரைவியல்
(B) தொலைக்காட்சிப் பதிவியல்
(C) தொலை நோக்குக் கருவி
(D) தொலை அளவியல்
(E) விடை தெரியவில்லை

42. ஆங்கிலச்சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எழுது.

Tempest

(A) நிலக்காற்று
(B) கடற்காற்று
(C) பெருங்காற்று
(D) சுழல்காற்று
(E) விடை தெரியவில்லை

43. தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தியவர் யார்?

(A) தாரா பாரதி

(B) தமிழ் ஒளி

(C) டி.கே. சிதம்பரநாதர்

(D) நாமக்கல் கவிஞர்

(E) விடை தெரியவில்லை

44. தேம்பாவணி _______ ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது.

(A) 19ஆம் நூற்றாண்டு

(B) 17ஆம் நூற்றாண்டு

(C) 18ஆம் நூற்றாண்டு

(D) 15ஆம் நூற்றாண்டு

(E) விடை தெரியவில்லை

45. தமிழன்னைக்குத் தொண்டாற்றிய ஜி.யு.போப் பிறந்த ஆண்டு எது?

(A) கி.பி. 1720

(B) கி.பி. 1825

(C) கி.பி. 1820

(D) கி.பி. 1830

(E) விடை தெரியவில்லை

46. 'மூன்று' என்ற எண்ணுப்பெயர் திராவிட மொழிகளில் ஒன்றான தெலுங்கில் எவ்வாறு வழங்கப்படுகிறது?

(A) மூரு

(B) மூகி

(C) மூணு

(D) மூடு

(E) விடை தெரியவில்லை

47. சரியாகச் சீர் பிரிக்கப்பட்ட குறளைக் கண்டறிக.

குறியெதிர்ப்பைநீரதுஉடைத்து.

(A) குறி யெதிர்ப் பைநீரது உடைத்து.

(B) குறியெதிர்ப் பைநீரது உடைத்து.

(C) குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

(D) குறியெதிர்ப்பை(நீ) ரது உடைத்து.

(E) விடை தெரியவில்லை

48. இறுதிச்சீரின் வாய்பாடு கண்டறிக.

இழுக்கா இயன்றது அறம்

(A) நிரைபு - பிறப்பு

(B) நேர் - நாள்

(C) நேர்பு - காசு

(D) நிரை - மலர்

(E) விடை தெரியவில்லை

49. விடுபட்ட சீர் கண்டறிக.

விருந்து புறத்ததாத் தாணுண்டல் சாவா

________ வேண்டற்பாற்று அன்று.

(A) குருந்தெனினும்

(B) பருந்தெனினும்

(C) விருந்தெனினும்

(D) மருந்தெனினும்

(E) விடை தெரியவில்லை

50. கீழ்க்கண்ட திருக்குறளின் அணி இலக்கணத்தைக் கண்டறிக.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

(A) ஏகதேச உருவக அணி

(B) உவமையணி

(C) உருவகம்

(D) எடுத்துக்காட்டு உவமையணி

(E) விடை தெரியவில்லை

51. இரு வினைகளின் பொருள் வேறுபாடு அறிந்து சரியான சொற்றொடரைக் கண்டுபிடி.

விரிந்தது – விரித்தது

(A) மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன. மயில் தோகையை விரித்தது.

(B) மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரித்தன. மயில் தோகையை விரிந்தன.

(C) மழைக்காற்று வீசியதால், பூவின் அலர் விரிந்தது. மயில் தோகையை விரித்தனர்.

(D) மழைக்காற்று வீசியதால், பூக்கள் விரித்தது. மயில் தோகையை விரிந்தது.

(E) விடை தெரியவில்லை

52. ஒற்றுப்பிழையற்ற தொடரை எழுதுக.

(A) சிற்ப கலையை போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்

(B) சிற்பக் கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்

(C) சிற்பக் கலையை போற்றி பாதுகாப்பது நமது கடமையாகும்

(D) சிற்ப கலையை போற்றி பாதுகாப்பது நமது கடமையாகும்

(E) விடை தெரியவில்லை

53. எழுத்துப் பிழையை திருத்தி எழுதுக.

பூவை விட்டு இரங்காதே
இரக்கை முரிந்த வண்ணத்துப் பூச்சியே

(A) பூவை விட்டு இறங்காதே இறக்கை முறிந்த வண்ணத்துப் பூச்சியே

(B) பூவை விட்டு இரங்காதே இறக்கை முரிந்த வண்ணத்துப் பூச்சியே

(C) பூவை விட்டு இறங்காதே இரக்கை முறிந்த வண்ணத்துப் பூச்சியே

(D) பூவை விட்டு இரங்காதே இரக்கை முரிந்த வண்ணத்துப் பூச்சியே

(E) விடை தெரியவில்லை

54. நிகழ்கால தெரிநிலைப் பெயரெச்சத் தொடரை எழுதுக.

(A) படிக்கின்ற பள்ளி
(B) படித்து முடித்தான்
(C) எழுதிய கடிதம்
(D) சிறிய கடிதம்
(E) விடை தெரியவில்லை

55. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரை கண்டறிக.

அறி

(A) அறிந்த
(B) அறிந்து
(C) அறியும்
(D) அறிவார்
(E) விடை தெரியவில்லை

56. வேர்ச்சொல்லைக் கொடுத்து வினையாலணையும் பெயர் உருவாக்கல்.

'அகழ்' - வேர்ச் சொல்லிற்கான வினையாலணையும் பெயர் காண்க.

(A) அகழ்தல்
(B) அகழி
(C) அகழ்வார்
(D) அகழ்வேன்
(E) விடை தெரியவில்லை

57. வேர்ச் சொல்லின் வினைமுற்றை காண்க.

வா

(A) வந்த
(B) வந்தனன்
(C) வந்து
(D) வருதல்
(E) விடை தெரியவில்லை

58. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

இராமனுடன் ________ பேர் கானகம் சென்றனர்.

(A) எப்படி
(B) எத்தனை
(C) யார்
(D) எங்கே
(E) விடை தெரியவில்லை

59. ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமையுள்ள எழுத்துக்களை எவ்வாறு அழைக்க வேண்டும்?

(A) வல்லின எழுத்துக்கள்
(B) மெல்லின எழுத்துக்கள்
(C) உயிர் எழுத்துக்கள்
(D) இன எழுத்துக்கள்
(E) விடை தெரியவில்லை

60. இன எழுத்துக்கள் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக.

சங்கு, பந்தயம், சிறுவன், கடல்

(A) சங்கு, பந்தயம்
(B) சங்கு, சிறுவன்
(C) பந்தயம், கடல்
(D) சங்கு, கடல்
(E) விடை தெரியவில்லை

61. பிழையான சொல்லைக் கண்டறிக.

(A) கண்டான்
(B) வென்ரான்
(C) நண்டு
(D) வண்டு
(E) விடை தெரியவில்லை



[Turn over

62. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________

(A) இன்உயிர்
(B) இனியஉயிர்
(C) இன்னுயிர்
(D) இனிமைஉயிர்
(E) விடை தெரியவில்லை

63. 'படிப்பறிவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) படி + அறிவு
(B) படிப்பு + அறிவு
(C) படி + வறிவு
(D) படிப்பு + வறிவு
(E) விடை தெரியவில்லை

64. பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கண்டறிக.

விளம்பு, மொழி, இயம்பு, கூறு, உரை

(A) உலகம்
(B) குழந்தை
(C) பேசு
(D) காவல்
(E) விடை தெரியவில்லை

65. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல்.

திருக்குறள் போன்ற அற இலக்கியங்கள் கூறும் கருத்துகளை நம் வாழ்வில் பின்பற்ற வேண்டும் _________ அவை நம் வாழ்வை மேம்படுத்தும்.

(A) எனவே
(B) ஏனெனில்
(C) ஆகையால்
(D) அது போல
(E) விடை தெரியவில்லை

66. இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு _________ இயற்கையைப் போற்றுவோம்.

(A) ஏனெனில்
(B) எனவே
(C) இருப்பினும்
(D) எனினும்
(E) விடை தெரியவில்லை

67. ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் :

'அனிலம்'

(A) அணிகலம்
(B) மயக்கம்
(C) தூக்கம்
(D) காற்று
(E) விடை தெரியவில்லை

68. எழுத்து வழக்கு.

புண்ணின் மேல் தடவுவது

(A) களிம்பு
(B) கலும்பு
(C) கழும்பு
(D) களும்பு
(E) விடை தெரியவில்லை

69. இரு பொருள் தருக.

'உரக்கம்'

(A) அறிவு, வலிமை
(B) தூக்கம், உறத்தல்
(C) கூறுதல், எடுத்தல்
(D) நலம், வளம்
(E) விடை தெரியவில்லை

70. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) சிறு வணிகம்
(B) விளையாட்டு
(C) பெரு வணிகம்
(D) ஏற்றுமதி
(E) விடை தெரியவில்லை

71. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

நாற்று, கன்று, குருத்து, பிள்ளை முதலான சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) மணி வகை
(B) குலை வகை
(C) இளம் பயிர் வகை
(D) பிஞ்சு வகை
(E) விடை தெரியவில்லை

72. 'பெயர் : மணிமேகலை' இதில் இடம்பெற்றுள்ள நிறுத்தற்குறியைக் கூறுக.

(A) முற்றுப்புள்ளி
(B) அரைப்புள்ளி
(C) முக்காற்புள்ளி
(D) காற்புள்ளி
(E) விடை தெரியவில்லை

73. ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களில் எவ்வகை நிறுத்தற்குறி இடுதல் வேண்டும்?

(A) காற்புள்ளி
(B) அரைப்புள்ளி
(C) முக்காற்புள்ளி
(D) முற்றுப்புள்ளி
(E) விடை தெரியவில்லை

74. வினைக்கு ஏற்ற மரபுச் சொல்லைக் கண்டறிக.

முறுக்கு ________

(A) சாப்பிட்டான்
(B) கடித்தான்
(C) தின்றான்
(D) உண்டான்
(E) விடை தெரியவில்லை

75. புலியின் ஒலிமரபுச் சொல்லைக் கண்டறிக.

(A) முழங்கும்
(B) பிளிறும்
(C) உறுமும்
(D) கதறும்
(E) விடை தெரியவில்லை

76. பிறவினை வாக்கியத்தைக் கண்டறிக.

(A) அவன் திருந்தினான்
(B) அவனைத் திருந்தச் செய்தான்
(C) அவன் திருத்தப்பட்டான்
(D) அவன் திருந்தவில்லை
(E) விடை தெரியவில்லை

77. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

கண்ணன் நேற்று வந்தான்.

(A) பிறவினை
(B) தன்வினை
(C) செய்வினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

78. செயப்பாட்டு வினையை எடுத்தெழுதுக.

கையைத் தரையில் ஓங்கி அடித்தார்.

(A) கையைத் தரையில் ஓங்கி அடிக்கப்பட்டது.
(B) கை தரையை ஓங்கி அடித்தது.
(C) கையைத் தரை ஓங்கி அடித்தது.
(D) கை தரையில் ஓங்கி அடிக்கப்பட்டது.
(E) விடை தெரியவில்லை

79. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?

(A) 9
(B) 8
(C) 6
(D) 5
(E) விடை தெரியவில்லை

80. கலைச் சொல்லைத் தெரிவு செய்க.

Marble

(A) பளிங்குக் கல்
(B) அரைவைக் கல்
(C) விண் எரிகல்
(D) சலவைக் கல்
(E) விடை தெரியவில்லை

81. கலைச்சொல்லைத் தேர்ந்தெடு.

Custodian

(A) அறிவுரைஞர்
(B) குத்தகைதாரர்
(C) பொறுப்பாளர்
(D) வாடிக்கையாளர்
(E) விடை தெரியவில்லை

82. கலைச்சொல் தருக.

Workshop

(A) வேலைத்தளம்
(B) பணியாற்றுதல்
(C) பட்டறை
(D) வேலைத்திறன்
(E) விடை தெரியவில்லை

83. கலைச்சொல் அறிக.

Trademark

(A) வணிகக் குழுமம்
(B) வணிகச் சங்கம்
(C) வணிகப் பொருள் சந்தையிடல்
(D) வணிகக் குறியீடு
(E) விடை தெரியவில்லை

84. பழமொழியின் பொருள் கண்டறிக.

தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்

(A) நெல்லுக்கு உரமிடவேண்டும்

(B) சூரியன் தன் கதிரால் வெளிச்சம் தரும்

(C) நாய் தன் குட்டியை மழையிலும், வெயிலிலும் பாதுகாக்கும்

(D) உரமிட்டால் விவசாயம் செழிக்கும்

(E) விடை தெரியவில்லை

85. பழமொழியின் பொருள் கண்டறிக.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

(A) வயதான காலத்தில் கோபம் கொள்ளக்கூடாது

(B) வயது இருக்கும் போது நன்கு உறங்க வேண்டும்

(C) வயது இருக்கும் போது உழைத்துப் பிழைத்துக்கொள்ள வேண்டும்

(D) காற்று வீசும் போது நன்கு சுவாசிக்க வேண்டும்

(E) விடை தெரியவில்லை

86. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) அணில் குட்டி

(B) மூங்கில் கொல்லை

(C) நெற்றாள்

(D) வைக்கோல் கூட்டம்

(E) விடை தெரியவில்லை

87. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) சோளத் தோப்பு

(B) தென்னங்கூட்டம்

(C) வேலங்காடு

(D) முருங்கை குரும்பை

(E) விடை தெரியவில்லை

கீழ்க்கண்ட பத்தியைப் படித்துச் சரியான விடையளிக்கவும்.

இந்தியாவின் முதல் யானைப் பாகனாக, அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பார்வதி பருவா இருக்கிறார். இந்த ஆண்டு குடியரசுத்தின விழாவில், பத்மவிருதுகள் பெற்று குடியரசுத்தலைவரால் கௌரவிக்கப்பட்ட 132 பேரில் பார்வதி பருவாவும் ஒருவர். யானைகள் பாதுகாப்பு, மீட்பு, யானைகள்-மனிதர்கள் மோதலைத் தடுப்பதற்காக இவர் எடுத்த நடவடிக்கைக்காக பத்மஸ்ரீ விருதைப் பெற்றுள்ளார்.

88. பார்வதி பருவா எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

(A) அரியானா (B) அஸ்ஸாம்

(C) ஆந்திரா (D) கேரளா

(E) விடை தெரியவில்லை

89. பார்வதி பருவா பெற்ற விருதின் பெயர் ________

(A) பத்மபூஷன் (B) பத்மவிபூஷன்

(C) பத்மஸ்ரீ (D) பாரதரத்னா

(E) விடை தெரியவில்லை

90. மேற்குறித்த் குடியரசு தினவிழாவில் கௌரவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.

(A) 142 (B) 132

(C) 122 (D) 152

(E) விடை தெரியவில்லை

91. பார்வதி பருவா இந்தியாவின் ________ யானைப் பாகனாக இருக்கிறார்.

(A) முதல் (B) இரண்டாம்

(C) மூன்றாம் (D) நான்காம்

(E) விடை தெரியவில்லை

92. பார்வதி பருவாவுக்கு பத்மஸ்ரீ விருது யாரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது?

(A) குடியரசுத்தலைவர் (B) பிரதமர்

(C) ஆளுநர் (D) முதலமைச்சர்

(E) விடை தெரியவில்லை

93. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.

பிரௌசர் (Browser) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் கண்டறிக.

(A) கைப்பொருள்
(B) உலாவி
(C) தொடு பொருள்
(D) வலைதளம்
(E) விடை தெரியவில்லை

94. குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்தும் பாவேந்தரின் நூல் எது?

(A) தமிழச்சியின் கத்தி
(B) குடும்ப விளக்கு
(C) எதிர்பாராத முத்தம்
(D) புரட்சிக்கவி
(E) விடை தெரியவில்லை

95. 'விரல் நுனி' என்ற நூலை இயற்றிய கவிஞரைக் கண்டறிக.

(A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(B) முடியரசன்
(C) பாவேந்தர்
(D) தாரா பாரதி
(E) விடை தெரியவில்லை

96. கண்ணதாசனின் இயற்பெயரைக் கண்டறிந்து எழுதுக.

(A) சுப்பையா
(B) முத்தையா
(C) தங்கையா
(D) இராமையா
(E) விடை தெரியவில்லை

97. திராவிட மொழிக் குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் எத்தனை வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன?

(A) நான்கு
(B) ஐந்து
(C) மூன்று
(D) ஆறு
(E) விடை தெரியவில்லை

98. திராவிட மொழிகளில் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி எது?

(A) துளு
(B) கன்னடம்
(C) தெலுங்கு
(D) தமிழ்
(E) விடை தெரியவில்லை

99. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் : ________, ________.

(A) திருக்குறள், நன்னூல்
(B) திரிகடுகம், ஏலாதி
(C) நற்றிணை, அகநானூறு
(D) அகநானூறு, புறநானூறு
(E) விடை தெரியவில்லை

100. பொருளைக் கண்டறிக.

என்பு தோல் போர்த்த...

(A) எலும்பு
(B) சீராக
(C) உடல்
(D) உயிர்
(E) விடை தெரியவில்லை

# பகுதி-ஆ – பொது அறிவு (ம) பகுதி-இ – திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு

# Part-B – General Studies & Part-C – Aptitude and Mental Ability

வினாக்கள் : 101–200 மொத்த மதிப்பெண்கள் : 150

**Questions : 101–200 Total Marks : 150**

---

101. Considering HIV type I and II, which statement is correct?
   (a) Infects mainly $CD^{4+}$ T cells and macrophages
   (b) Lyses $CD^{4+}$ T cells break the macrophages persistently
   (c) Infects long lived cells, establishing reservoir for persistent infection
   (d) Infected monocytes spread to brain causing dementia

   (A) (a), (c) and (d)
   (B) (a), (b) and (d)
   (C) (a), (b), (c) and (d)
   (D) (b), (c) and (d)
   (E) Answer not known

   HIV வகை I மற்றும் II யை கருத்தில் கொண்டு பின்வரும் நான்கில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   (a) முக்கியமாக $CD^{4+}$ T செல்கள் மற்றும் மேக்ரோபேஜ்களை பாதிக்கிறது.
   (b) $CD^{4+}$ T cell களை உடைத்து மேக்ரோபேஜ்களை தொடர்ந்து பாதிக்கிறது.
   (c) நீண்டகால செல்களை தாக்கி நோய் காரணியை தேக்கி வைக்கிறது
   (d) மோனோசைட்டுகளை பாதித்து, மூளைக்கு பரப்பி, பைத்தியம் என்ற நிலையை அடைய செய்கிறது.

   (A) (a), (c) மற்றும் (d)
   (B) (a), (b) மற்றும் (d)
   (C) (a), (b), (c) மற்றும் (d)
   (D) (b), (c) மற்றும் (d)
   (E) விடை தெரியவில்லை

102. Theme for earth day 2020 is

(A) Climate action
(B) Protect our species
(C) End plastic pollution
(D) Climate literacy
(E) Answer not known

2020 ம் ஆண்டில் பூமி தினத்தின் கருப்பொருள் ———————— ஆகும்.

(A) பருவநிலை செயல்
(B) நமது உயிரினங்களைக் காத்தல்
(C) பிளாஸ்டிக் மாசின் முடிவு
(D) பருவநிலை குறித்த கல்வியறிவு
(E) விடை தெரியவில்லை

103. What is 3E?

(A) Reduce, reuse, recycle
(B) Energy, economy and envision
(C) Ergonomics, evolution and economy
(D) Energy, economy and environment
(E) Answer not known

3E என்பதன் விளக்கம் என்ன?

(A) குறைத்தல், திரும்பப்பயன்படுத்துதல், மறுசுழற்சி
(B) ஆற்றல், பொருளாதாரம், கற்பனை
(C) பணிச்சூழலியல், மதிப்பீடு, பொருளாதாரம்
(D) ஆற்றல், பொருளாதாரம், சுற்றுச்சூழல்
(E) விடை தெரியவில்லை

104. Which of the following statements are true about tropical thorn and tropical desert type?

(i) These are associated with semi-deserts and deserts

(ii) These are associated with the coastal region of Tamil Nadu and Andhrapradesh.

(iii) These are found in the inner Himalayas

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

வெப்பமண்டல முள் மற்றும் வெப்பமண்டல பாலைவன வகைகளைப் பற்றி பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(i) இவை அரை பாலைவனங்கள் மற்றும் பாலைவனங்களுடன் தொடர்புடையவை

(ii) இவை தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசத்தின் கடலோர பகுதியுடன் தொடர்புடையவை

(iii) இவை உள் இமயமலையில் காணப்படுகின்றன

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

105. Match the Padma Shri Awardees, 2025 from the following with their respective field.

| | | | |
|---|---|---|---|
| (a) | Purisai Kannappa Sambandan | 1. | Trade and Industry |
| (b) | R. Ashwin | 2. | Sports |
| (c) | Seeni Viswanathan | 3. | Literature and Education |
| (d) | R.G. Chandramogan | 4. | Art |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) Answer not known

பின்வருவனவற்றிலிருந்து 2025 ம் ஆண்டிற்கான பத்ம ஸ்ரீ விருது பெற்றவர்களை அவர்களுடைய துறையோடு சரியாக பொருத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | புரிசை கண்ணப்ப சம்பந்தன் | 1. | வர்த்தகம் மற்றும் தொழில் |
| (b) | R. அஸ்வின் | 2. | விளையாட்டு |
| (c) | சீனி விஸ்வநாதன் | 3. | இலக்கியம் மற்றும் கல்வி |
| (d) | R.G. சந்திரமோகன் | 4. | கலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

106. How did the Drain of Wealth theory of the British affect India?

(i) Poverty and Famine

(ii) Stagnant Economic Development

(iii) Decreased Tax Burden

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (iii) only

(D) (i) and (iii) only

(E) Answer not known

பிரிட்டிஷாரின் செல்வச் சுரண்டல் கோட்பாடு இந்தியாவை எவ்வாறு பாதித்தது?

(i) ஏழ்மை மற்றும் பஞ்சம்

(ii) பொருளாதார வளர்ச்சியின் தேக்கம்

(iii) வரிச்சுமை குறைவு

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

107. (i) Shambhu is another title of this god.

(ii) Vedic god Rudra is identified with him.

Which god is described in the above statements?

(A) Brahma

(B) Muruga

(C) Shiva

(D) Vishnu

(E) Answer not known

(i) சம்பு இந்துக் கடவுளின் மற்றொரு பெயராகும்.

(ii) இவர் வேதகாலக் கடவுளான ருத்ரனோடு அடையாளப்படுத்தப்படுகிறார்.

மேற்கூறிய இக்கூற்றுகள் எந்தக் கடவுளைப் பற்றி விவரிக்கிறது?

(A) பிரம்மன்

(B) முருகன்

(C) சிவன்

(D) விஷ்ணு

(E) விடை தெரியவில்லை

108. Nizam Shahi kingdom of Ahmadnagar was founded by

(A) Hasan Shah
(B) Malik Ahmad
(C) Muhammad Shah
(D) Nizam-ul-Mulk
(E) Answer not known

அகமது நகரின் நிசாம் ஷாஹி அரசினைத் தோற்றுவித்தவர்

(A) ஹசன் ஷா
(B) மாலிக் அகமது
(C) முகம்மது ஷா
(D) நிசாம்-உல்-முல்க்
(E) விடை தெரியவில்லை

109. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Abolition of Jizya | 1. | A.D. 1563 |
| (b) | Abolition of Pilgrimage Tax | 2. | A.D. 1564 |
| (c) | Abolition of Enslaving war prisoner | 3. | A.D. 1562 |
| (d) | Fall of Bairam Khan | 4. | A.D. 1560 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) Answer not known

பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஜிஸியாவை ஒழித்தல் | 1. | கி.பி. 1563 |
| (b) | புனிதப் பயண வரியை ஒழித்தல் | 2. | கி.பி. 1564 |
| (c) | போர்க் கைதிகளை அடிமைகளாக வைத்திருத்தலை ஒழித்தல் | 3. | கி.பி. 1562 |
| (d) | பைராம் கான் வீழ்ச்சி | 4. | கி.பி. 1560 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

110. Consider the Assertion [A] Reason [R] :

Assertion [A] : Human Right is a Legal Right.

Reason [R] : While Human Being have rights, the State has a corresponding duty to protect the rights.

(A) [A] and [R] are correct; [R] is the correct explanation of [A]

(B) [A] and [R] are correct; [R] is not correct explanation of [A]

(C) [A] is true; [R] is false

(D) [R] is true; [A] is false

(E) Answer not known

கூற்று [A] மற்றும் காரணம் [R] ஐ கருதுக :

கூற்று [A] : மனித உரிமைகள் என்பது சட்ட உரிமைகள் ஆகும்.

காரணம் [R] : மனித உயிர்கள் உரிமைகள் கொண்டிருக்கும் பொழுது, அரசு, அதற்குரிய உரிமைகளை பாதுகாக்க வேண்டிய கடமைகளை கொண்டிருக்கிறது.

(A) [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]க்கு சரியான விளக்கம்

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]க்கு சரியான விளக்கமல்ல

(C) [A] என்பது சரி [R] என்பது தவறு

(D) [R] என்பது சரி [A] என்பது தவறு

(E) விடை தெரியவில்லை

111. The power to increase the number of Judges in the Supreme Court of India is vested with

(A) The President of India (B) The Chief Justice of India

(C) The Parliament (D) The Law Minister

(E) Answer not known

இந்திய உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் அதிகாரம் யாரால் வழங்கப்படுகிறது ?

(A) இந்திய குடியரசு தலைவர் (B) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

(C) பாராளுமன்றம் (D) சட்ட அமைச்சர்

(E) விடை தெரியவில்லை

112. Choose the correct matches:

| The Constituent Assembly Committees | | Chairman |
|---|---|---|
| (1) Committee in the rules of Procedure | – | Dr. Rajendra Prasad |
| (2) Union Constitution Committee | – | J.B. Kripalani |
| (3) Advisory Committee on Fundamental Rights | – | Vallabhbhai Patel |
| (4) States Committee | – | H.C. Mookerjee |

(A) (1) and (2) are correct

(B) (2) and (3) are correct

(C) (2) and (4) are correct

(D) (1) and (3) are correct

(E) Answer not known

பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்கவும் :

| அரசமைப்பு நிர்ணயசபைக் குழுக்கள் | | தலைவர்கள் |
|---|---|---|
| (1) நடைமுறை விதிகள் குழு | – | Dr. ராஜேந்திர பிரசாத் |
| (2) ஒன்றிய அரசமைப்பு குழு | – | J.B. கிருபாளனி |
| (3) அடிப்படை உரிமைகள் ஆலோசனைக் குழு | – | வல்லபபாய் பட்டேல் |
| (4) மாநிலங்களுக்கான குழு | – | H.C. முகர்ஜி |

(A) (1) மற்றும் (2) சரி

(B) (2) மற்றும் (3) சரி

(C) (2) மற்றும் (4) சரி

(D) (1) மற்றும் (3) சரி

(E) விடை தெரியவில்லை

113. Choose the State that has the highest number of seats in the House of people?

(A) Madhya Pradesh (B) Gujarat

(C) Karnataka (D) Odisha

(E) Answer not known

மக்களவையில் அதிக இடங்களைக் கொண்ட மாநிலம் எது?

(A) மத்தியப் பிரதேசம் (B) குஜராத்

(C) கர்நாடகா (D) ஒடிசா

(E) விடை தெரியவில்லை

114. The joint-sittings of the two houses of the Indian Parliament take place in the

(A) Lok Sabha (B) Rajya Sabha

(C) Central Hall of Parliament (D) Library Hall of Parliament

(E) Answer not known

இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டம் எங்கு நடைபெறுகின்றன?

(A) மக்களவை (B) மாநிலங்களவை

(C) நாடாளுமன்ற மைய மண்டபம் (D) நாடாளுமன்ற நூலக மண்டபம்

(E) விடை தெரியவில்லை

115. The Chancellor of Germany designate, Friedrich Merz belongs to

(A) Nazi Party

(B) Social Democratic Party

(C) Christian Democratic Union Party

(D) Communist Party

(E) Answer not known

ஜெர்மனியின் புதிய அதிபராக விரைவில் பொறுப்பேற்கவுள்ள ஃப்ரெட்ரிக் மெர்ஸ் எக்கட்சியை சேர்ந்தவர்?

(A) நாஜிக் கட்சி

(B) சமூக ஜனநாயக கட்சி

(C) கிருத்துவ ஜனநாயக ஐக்கிய கட்சி

(D) கம்யூனிஸ்ட் கட்சி

(E) விடை தெரியவில்லை

116. The president shall not be a member of either house of Parliament, or of a house of any State legislature is a condition for President's office under

(A) Article 56

(B) Article 57

(C) Article 58

(D) Article 59

(E) Answer not known

குடியரசுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது மாநில அவையின் சட்டமன்ற உறுப்பினராகவோ இருக்கக்கூடாது என்று எந்த அரசியல் சாசன விதி கூறுகிறது?

(A) விதி 56

(B) விதி 57

(C) விதி 58

(D) விதி 59

(E) விடை தெரியவில்லை

117. In the following categories of the people, who can acquire Indian citizenship by registration?

(1) Citizen of Common Wealth Countries

(2) Minor children of Indian parents

(3) Women married to Indian citizen

(4) People of Indian origin

(A) (1) and (2) only

(B) (1) and (3) only

(C) (1) and (4) only

(D) All of the above

(E) Answer not known

பின்வரும் வகைகளில் உள்ள மக்களில் தங்கள் இந்திய குடியுரிமையை யாரெல்லாம் பதிவு செய்து கொள்ளலாம்?

(1) காமன்வெல்த் நாடுகளின் குடிமகன்

(2) இந்திய பெற்றோரின் குழந்தைகள்

(3) இந்திய குடிமகனை மணந்தபெண்கள்

(4) இந்திய வம்சாவழி குழந்தைகள்

(A) (1) மற்றும் (2) மட்டும்

(B) (1) மற்றும் (3) மட்டும்

(C) (1) மற்றும் (4) மட்டும்

(D) இவையனைத்தும்

(E) விடை தெரியவில்லை

118. Which among the following statements is/are true to Justice Party?

(I) The Justice Party is the foundation head of the non-brahmin movement in India.

(II) The Justice Party rule established the staff selection board for the selection of government officials.

(III) The Justice Party proposed home rule movement all over India

(IV) The Justice Party introduced Hindu Religious Endownment Act

(A) (I) and (II) only

(B) (I) and (IV) only

(C) (I), (II) and (III) only

(D) (I), (II) and (IV) only

(E) Answer not known

பின்வரும் கூற்றுகளில் எவை நீதிக்கட்சியைப் பற்றி உண்மையானவை?

(I) இந்தியாவில் பிராமணரல்லாத இயக்கங்களுக்கு அடித்தளம் இட்டது நீதிக்கட்சி.

(II) நீதிக்கட்சி ஆட்சியில் அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது.

(III) நீதிக்கட்சி இந்தியா முழுவதும் தன்னாட்சி இயக்கத்தை (ஹோம் ரூல்) முன்மொழிந்தது.

(IV) நீதிக்கட்சி இந்து மத ஒழிப்பு சட்டத்தை அறிமுகப்படுத்தியது.

(A) (I) மற்றும் (II) மட்டும்

(B) (I) மற்றும் (IV) மட்டும்

(C) (I), (II) மற்றும் (III) மட்டும்

(D) (I), (II) மற்றும் (IV) மட்டும்

(E) விடை தெரியவில்லை

119. Arrange the following health programmes in chronological order:

(1) The National Malaria Eradication programme

(2) The National Filaria Control Programme

(3) The National Family Planning Programme

(4) National Smallpox Eradication Programme

(A) (2), (1), (4), (3)

(B) (3), (2), (1), (4)

(C) (2), (3), (4), (1)

(D) (3), (4), (1), (2)

(E) Answer not known

பின்வரும் சுகாதாரத் திட்டங்களைக் கால வரிசைப்படி வரிசைப்படுத்துக:

(1) தேசிய மலேரியா ஒழிப்புத்திட்டம்

(2) தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம்

(3) தேசிய குடும்ப நலத்திட்டம்

(4) தேசிய பெரியம்மை ஒழிப்புத்திட்டம்

(A) (2), (1), (4), (3)

(B) (3), (2), (1), (4)

(C) (2), (3), (4), (1)

(D) (3), (4), (1), (2)

(E) விடை தெரியவில்லை

120. Match the following welfare scheme with its aims :

| | | | |
|---|---|---|---|
| (a) | ICDS | 1. | Reduce poverty in urban |
| (b) | NULM | 2. | Provide food to children under six years and their mothers |
| (c) | HRIDAY | 3. | Provide financial assistance to the elderly, widows and PWD in the form of pension |
| (d) | NSAP | 4. | Preserve and rejuvenate heritage cities |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) Answer not known

பின்வரும் நலத்திட்டங்களை அதன் நோக்கத்துடன், சரியாக பொருத்தவும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | ICDS | 1. | நகர்புறங்களின் வறுமையை குறைத்தல் |
| (b) | NULM | 2. | ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் அவர்களின் தாய்மார்களுக்கும் சத்து உணவு வழங்குதல் |
| (c) | HRIDAY | 3. | முதியோர், விதவை மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல் |
| (d) | NSAP | 4. | பாரம்பரிய நகரங்களைப் பாதுகாத்து புத்துயிர் பெறச் செய்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

121. Assertion [A] : Statistically speaking, the unemployment rate is low in India.

Reason [R] : Indian Economy generates enough quality jobs to sustain its huge population

(A) [A] is true but [R] is false

(B) [A] is false but [R] is true

(C) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(D) Both [A] and [R] are not true

(E) Answer not known

கூற்று [A] : புள்ளி விவரப்படி இந்தியாவில் வேலையின்மையின் விகிதம் குறைவாக உள்ளது.

காரணம் [R] : இந்திய பொருளாதாரம் அதன் மிகப்பெரிய மக்கள் தொகையைப் பராமரிக்க போதுமான தரமான வேலைகளை உருவாக்குகிறது.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

(B) கூற்று [A] தவறு ஆனால் காரணம் [R] சரி

(C) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்

(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

122. Which of the following statements are true about grants-in aid?

(1) Grants in aid are governed by Union Government.

(2) Grants under Art. 275 are given to the states in need of assistance and their quantum is decided by Finance Commission.

(3) The distribution of grants under Art. 275 is concerned the second Finance Commission formulated a number of principles.

(A) (2) only

(B) (1) and (2) only

(C) (1), (2) and (3) only

(D) (1) and (3) only

(E) Answer not known

மானிய உதவிகள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?

(1) உதவி மானியங்கள் மத்திய அரசால் நிர்வகிக்கப்படுகின்றன.

(2) உதவி மானியங்கள் பிரிவு 275 உதவி தேவைப்படும் மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது மற்றும் அவற்றின் அளவு நிதி ஆணையத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

(3) பிரிவு 275 இன் கீழ் மானியங்களின் விநியோகம் இரண்டாம் நிதி ஆணையத்தால் பல கொள்கைகளை வகுத்தது.

(A) (2) சரி

(B) (1) மற்றும் (2) சரி

(C) (1), (2) மற்றும் (3) சரி

(D) (1) மற்றும் (3) சரி

(E) விடை தெரியவில்லை

123. Which of the following statements are correct with respect to 'Equitable growth across Tamil Nadu' ?

(i) 50% of states GDP is spread over 25%

(ii) Tamil Nadu accounts for 6% of the country's population.

(iii) Tamil Nadu's per capita income is 1.75 times higher compared to the National average.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (ii) and (iii) only

(D) (i) and (ii) only

(E) Answer not known

'தமிழ்நாடு முழுவதும் நேர்மையான வளர்ச்சி' தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது சரியானது ?

(i) மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% மாநிலத்தின் 25% பகுதிகளில் பரவியுள்ளது.

(ii) நாட்டின் மக்கள் தொகையில் 6% தமிழ்நாட்டில் உள்ளனர்.

(iii) தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் 1.75 மடங்கு அதிகம்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) மற்றும் (ii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

124. Which of the following is TRUE about NITI Aayog?

(i) The power to impose policies.

(ii) The power to allocate funds.

(iii) Policies are formed and then the states are consulted

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (iii) only

(D) (i) and (iii) only

(E) Answer not known

பின்வருவனவற்றுள் நிதி ஆயோக் பற்றி எது உண்மை?

(i) கொள்கைகளைத் திணிக்கும் அதிகாரம்

(ii) நிதி ஒதுக்கும் அதிகாரம்

(iii) கொள்கைகள் உருவாக்கப்பட்டு பின்னர் மாநிலங்களுடன் கலந்தாலோசிக்கப்படுகிறது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

125. Which of the following year was the LPG model for attaining Economic Development introduced?

(A) 1891 (B) 1991

(C) 2021 (D) 2022

(E) Answer not known

பொருளாதார வளர்ச்சி அடைய எந்த ஆண்டில் LPG மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டது?

(A) 1891 (B) 1991

(C) 2021 (D) 2022

(E) விடை தெரியவில்லை

126. Find out the correct statement.

(a) Ayothidas Pandithar started a weekly journal called "Oru Paisa Thamizhan".

(b) The Serampore missionaries were the second Evangelical Baptist Missionaries in India.

(c) The Rahnumai Mazdayasnan Sabha was founded in 1851 by the Buddhist.

(A) (a) only

(B) (a) and (b) only

(C) (a) and (c) only

(D) (c) only

(E) Answer not known

சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

(a) அயோத்திதாச பண்டிதர் "ஒரு பைசா தமிழன்" என்ற பெயரில் வாராந்திர பத்திரிக்கை ஒன்றைத் தொடங்கினார்.

(b) செராம்பூர் மதப்பரப்பாளர்களே இந்தியாவிற்கு இரண்டாவதாக வருகை தந்த நற்செய்தி மறைப் பணியாளர் ஆவார்.

(c) ரக்னுமய் மத்யஸ்னன் சபா என்ற அமைப்பை 1851-ல் பௌத்தர்கள் நிறுவினார்கள்

(A) (a) மட்டும்

(B) (a) மற்றும் (b) மட்டும்

(C) (a) மற்றும் (c) மட்டும்

(D) (c) மட்டும்

(E) விடை தெரியவில்லை

127. Which of the following statements are true about Madasamy?

(i) He was the right hand of V.O.C

(ii) He escaped to Germany

(iii) He participated in the Non Cooperation Movement.

(A) (i) and (ii) only

(B) (i) only

(C) (i) and (iii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

கீழ்கண்டவற்றுள் மாடசாமி பற்றிய உண்மையான கூற்றினை கூறு.

(i) இவர் வ.உ.சி.யின் வலது கையாக இருந்தவர்

(ii) இவர் ஜெர்மனிக்கு தப்பிச் சென்றார்

(iii) இவர் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்திருந்தார்.

(A) (i) ம் (ii) ம் சரி

(B) (i) மட்டும் சரி

(C) (i) ம் (iii) ம் சரி

(D) (ii) ம் (iii) ம் சரி

(E) விடை தெரியவில்லை

128. Among the following writer who stated, "The Indus Valley people were peace loving and unwarlike"?

(A) Mackey
(B) A.D. Pusalker
(C) R.C. Majumdar
(D) Vincent Smith
(E) Answer not known

பின்வரும் எழுத்தாளர்களில் "சிந்து சமவெளி மக்கள் அமைதியை விரும்புபவர்கள் மற்றும் போர்க்குணமற்றவர்கள்" என்று கூறுகிறார்.

(A) மேக்கி
(B) ஏ.டி. புசுல்கர்
(C) ஆர்.சி. மஜீம்தார்
(D) வின்சென்ட் ஸ்மித்
(E) விடை தெரியவில்லை

129. Arranging chronological order/event type. Arrange the following events (Rulers) in chronological order.

1. Rajaraja - I
2. Vikrama Chola
3. Kulottunga - I
4. Kulottunga - II

(A) 2, 3, 4, 1
(B) 1, 2, 3, 4
(C) 1, 3, 2, 4
(D) 3, 1, 4, 2
(E) Answer not known

காலவரிசைப்படி வரிசைப்படுத்து. கொடுக்கப்பட்ட நிகழ்வுகளை (அரசர்களை) காலவரிசைப்படுத்துக.

1. முதலாம் ராஜராஜன்
2. விக்கிரம சோழன்
3. முதலாம் குலோத்துங்கன்
4. இரண்டாம் குலோத்துங்கன்

(A) 2, 3, 4, 1
(B) 1, 2, 3, 4
(C) 1, 3, 2, 4
(D) 3, 1, 4, 2
(E) விடை தெரியவில்லை

130. Match correctly the Gupta Ministers of Central Administration.

(a) Mahadandanayaka — 1. Minister for Foreign Affairs

(b) Dandopashika — 2. Chief record keeper

(c) Mahasandhivigrahika — 3. Chief Justice

(d) Mahakshapatalika — 4. Head of Police Department

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) Answer not known

மத்திய அரசின் குப்தா அமைச்சர்களுடன் சரியாகப் பொருத்துக.

(a) மகாதண்டநாயக்கா — 1. வெளியுறவு அமைச்சர்

(b) தண்டோபாஷிகா — 2. தலைமை பதிவுக் காப்பாளர்

(c) மகாசாந்தி விக்ரஹிகா — 3. தலைமை நீதிபதி

(d) மஹாக்ஷபதாலிகா — 4. காவல்துறைத் தலைவர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

131. What does Valluvar mention as causing suffering?

(i) Arayathu kollum natpu (Unrequited Friendship)

(ii) Arayinthu thelinthavanitam iyappatudhal (Doubts about a friend who has clarified)

(iii) Anbudaiavarahairuthal (Being loving)

(iv) Nani nakariham potruthal (Admiring the subtle civilization)

(A) (i) only

(B) (ii), (iii) only

(C) (i), (ii) only

(D) (iii), (iv) only

(E) Answer not known

'இடும்பை' தருவனவாக வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

(i) ஆராயாது கொள்ளும் நட்பு

(ii) ஆராய்ந்து தெளிந்தவனிடம் ஐயப்படுதல்

(iii) அன்புடையவராயிருத்தல்

(iv) நனிநாகரீகம் போற்றுதல்

(A) (i) மட்டும்

(B) (ii), (iii) மட்டும்

(C) (i), (ii) மட்டும்

(D) (iii), (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

132. 'Addressing the learned without extensive study is like'

The above Thirukkural statement most related to

(A) As between mankind and animal

(B) A breastless woman's longing for sex

(C) The beauty of a doll made of clay

(D) Playing dice without a board

(E) Answer not known

'அறிவை நிரப்பிக்கொள்வதற்கேற்ற நூல்களைக் கற்று அறிவைத் திரட்டிக்கொள்ளாமல் ஒருவன் அவையின்கண் ஒருபொருள் பற்றிப் பேசுவது' என்ற கருத்து எந்தத் திருக்குறள் உவமையோடு பொருந்துகிறது என்பதைக் கூறுக.

(A) விலங்கொடு மக்களனையர்

(B) பயவாக்-களர் அனையர்

(C) எழில் நலம் மண்மாண் புனைபாவை யற்று

(D) அரங்கின்றி வட்டாடி யற்றே

(E) விடை தெரியவில்லை

133. To arrange the following concepts by Thiruvalluvar

1. Protection
2. Creation
3. Production
4. Planning

(A) 3, 1, 2, 4

(B) 2, 3, 1, 4

(C) 1, 2, 4, 3

(D) 4, 1, 3, 2

(E) Answer not known

பின்வருவனவற்றை வள்ளுவர் வழி வரிசைப்படுத்துக.

1. காத்தல்
2. இயற்றல்
3. ஈட்டல்
4. காத்த வகுத்தல்

(A) 3, 1, 2, 4

(B) 2, 3, 1, 4

(C) 1, 2, 4, 3

(D) 4, 1, 3, 2

(E) விடை தெரியவில்லை

134. Who is the author of the short story "Anbalippu"?

(A) T. Janagiraman
(B) Rajamkrishnan
(C) Thilagavathi
(D) K. Alagirisamy
(E) Answer not known

"அன்பளிப்பு" என்ற சிறுகதை நூலின் ஆசிரியர்

(A) தி. ஜானகிராமன்
(B) ராஜம்கிருஷ்ணன்
(C) திலகவதி
(D) கு. அழகிரிசாமி
(E) விடை தெரியவில்லை

135. Match correctly the Excavation sites and Archaeologists

(a) Boombuhar Excavation — 1. H. Subbarayalu
(b) Vellalur Excavation — 2. Nadana Kasinathan
(c) Kodumanal Excavation — 3. R. Nagasamy
(d) Karur Excavation — 4. Poongundran

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) Answer not known

அகழாய்வு இடங்களையும் அகழாய்வாளர்களையும் சரியாகப் பொருத்துக :

(a) பூம்புகார் அகழாய்வு — 1. H. சுப்பராயலு
(b) வெள்ளலூர் அகழாய்வு — 2. நடன காசிநாதன்
(c) கொடுமணல் அகழாய்வு — 3. R. நாகசாமி
(d) கரூர் அகழாய்வு — 4. பூங்குன்றன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

136. Mukesh takes twice as much time as Suresh to complete a work and Ramesh does it in the same time as Mukesh and Suresh together. If all three working together can finish the work in 9 days then the time taken by Mukesh to finish the work is

(A) 27 days
(B) 54 days
(C) 9 days
(D) 18 days
(E) Answer not known

முகேஷ் வேலையை முடிக்க சுரேஷை விட இரண்டு மடங்கு அதிக நேரம் எடுத்துக்கொள்கிறார். மேலும் ரமேஷ் அதை முகேஷ் மற்றும் சுரேஷ் ஒன்றாகச் செய்யும் அதே நேரத்தில் செய்கிறார். மூவரும் சேர்ந்து வேலையை 9 நாட்களில் முடிக்க முடிந்தால், முகேஷ் வேலையை முடிக்க எடுக்கும் நேரம்

(A) 27 நாட்கள்
(B) 54 நாட்கள்
(C) 9 நாட்கள்
(D) 18 நாட்கள்
(E) விடை தெரியவில்லை

137. If 3 men or 9 boys can finish a piece of work in 21 days, in how many days can 5 men and 6 boys together do the same piece of work?

(A) 8 days
(B) 12 days
(C) 14 days
(D) 9 days
(E) Answer not known

3 ஆண்கள் அல்லது 9 சிறுவர்கள் ஒரு வேலையை 21 நாட்களில் முடிக்கின்றனர். அதே வேலையை 5 ஆண்கள் மற்றும் 6 சிறுவர்கள் சேர்ந்து எத்தனை நாட்களில் முடிப்பர்?

(A) 8 நாட்கள்
(B) 12 நாட்கள்
(C) 14 நாட்கள்
(D) 9 நாட்கள்
(E) விடை தெரியவில்லை

138. Find the area of the trapezium if its height is 5.9 cm and the sides are 7 cm and 6 cm.

(A) 37.35 sq. cm
(B) 38.35 sq. cm
(C) 35.38 sq. cm
(D) 38.53 sq. cm
(E) Answer not known

ஒரு சரிவகத்தின் உயரம் = 5.9 செ.மீ, சரிவகத்தின் பக்கங்கள் முறையே 7 செ.மீ, 6 செ.மீ எனில், சரிவகத்தின் பரப்பளவு என்ன?

(A) 37.35 ச. செ.மீ
(B) 38.35 ச. செ.மீ
(C) 35.38 ச. செ.மீ
(D) 38.53 ச. செ.மீ
(E) விடை தெரியவில்லை

139. In how many years will Rs. 6,600 become Rs. 6,930 at 10% p.a. if the interest compounded half yearly?

(A) 3 months
(B) 6 months
(C) 9 months
(D) 1 year
(E) Answer not known

10% ஆண்டு வட்டியில் அரையாண்டுக்கொருமுறை வட்டி கணக்கிடப்பட்டால் எத்தனை ஆண்டுகளில் ரூ. 6,600 ஆனது ரூ. 6,930 ஆக மாறும்?

(A) 3 மாதங்கள்
(B) 6 மாதங்கள்
(C) 9 மாதங்கள்
(D) 1 ஆண்டு
(E) விடை தெரியவில்லை

140. Find the simple interest on Rs. 45,000 at 10% per annum for 5 years.

(A) Rs. 9,000
(B) Rs. 22,500
(C) Rs. 4,500
(D) Rs. 20,500
(E) Answer not known

ரூ. 45,000 திற்கு 10% வட்டி வீதம் எனில் 5 ஆண்டுகளுக்குத் தனிவட்டி காண்க.

(A) ரூ. 9,000
(B) ரூ. 22,500
(C) ரூ. 4,500
(D) ரூ. 20,500
(E) விடை தெரியவில்லை

141. The ratio 20 : 15 is equivalent to

(A) 4 : 3
(B) 3 : 4
(C) 5 : 3
(D) 10 : 5
(E) Answer not known

20 : 15 என்ற விகிதம் ———— க்குச் சமானமானது.

(A) 4 : 3
(B) 3 : 4
(C) 5 : 3
(D) 10 : 5
(E) விடை தெரியவில்லை

142. Find the ratio of the HCF and LCM of the numbers 18 and 30.

(A) 1 : 15
(B) 2 : 15
(C) 3 : 5
(D) 7 : 9
(E) Answer not known

18 மற்றும் 30 ஆகிய எண்களின் மீ.பெ.கா மற்றும் மீ.சி.ம – வின் விகிதத்தைக் காண்க.

(A) 1 : 15
(B) 2 : 15
(C) 3 : 5
(D) 7 : 9
(E) விடை தெரியவில்லை

143. Two numbers are in the ratio of 2 : 3. If their HCF is 15 find the numbers.

(A) 30 and 15
(B) 15 and 30
(C) 45 and 30
(D) 30 and 45
(E) Answer not known

இரு எண்கள் 2 : 3 என்ற விகிதத்தில் காணப்படுகின்றன. அவைகளின் மீ.பொ.வ. 15 எனில், அவ்வெண்களைக் காண்க.

(A) 30 மற்றும் 15
(B) 15 மற்றும் 30
(C) 45 மற்றும் 30
(D) 30 மற்றும் 45
(E) விடை தெரியவில்லை

144. If the difference between 80% of a number and 60% of the same number is 1200, then find 25% of that number

(A) 1400
(B) 1450
(C) 1500
(D) 1550
(E) Answer not known

ஓர் எண்ணின் 80% க்கும் அதே எண்ணின் 60% க்கும் இடையேயுள்ள வித்தியாசம் 1200 எனில் அந்த எண்ணின் 25% ஐ காண்க.

(A) 1400
(B) 1450
(C) 1500
(D) 1550
(E) விடை தெரியவில்லை

145. Find the missing number.

8, 24, 12, 36, 18, 54, __________

(A) 108 (B) 27

(C) 72 (D) 68

(E) Answer not known

விடுபட்ட எண்ணைக் காண்க.

8, 24, 12, 36, 18, 54, __________

(A) 108 (B) 27

(C) 72 (D) 68

(E) விடை தெரியவில்லை

146. The next term in the given sequence is

5, 24, 99, 378, ________

(A) 1380 (B) 1387

(C) 1384 (D) 1377

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர் வரிசையில் அடுத்து வரும் உறுப்பு

5, 24, 99, 378 ________

(A) 1380 (B) 1387

(C) 1384 (D) 1377

(E) விடை தெரியவில்லை

147. R E 5 D A P $ 3 T I Q 7 9 B # 2 K % U 1 M W 4 * J 8 N

Which of the following is exactly in the middle between 3 and 1, in the above arrangement?

(A) B (B) K

(C) 9 (D) #

(E) Answer not known

R E 5 D A P $ 3 T I Q 7 9 B # 2 K % U 1 M W 4 * J 8 N

மேலே கொடுக்கப்பட்ட உறுப்புகளில் 3 க்கும் 1 க்கும் இடைப்பட்ட சரியான உறுப்பு

(A) B (B) K

(C) 9 (D) #

(E) விடை தெரியவில்லை

148. If all the digits are dropped, which of the following is third to the right of the eleventh from the right end?

* E 7 O & 6 ^ 4 Z 5 * 3 9 T ! D # 2 $ U

(A) ^ (B) 8

(C) Z (D) T

(E) Answer not known

கீழே உள்ளவற்றில் அனைத்து இலக்கங்களையும் நீக்கிய பின் பின்வருவனவற்றில் எது வலது முனையிலிருந்து பதினொன்றாவது எண்ணின் வலது புறத்தில் மூன்றாவதாக உள்ளது?

* E 7 O & 6 ^ 4 Z 5 * 3 9 T ! D # 2 $ U

(A) ^ (B) 8

(C) Z (D) T

(E) விடை தெரியவில்லை

149. Traditional energy sources that are used for different purposes are called

(A) Renewable sources of energy

(B) Non-renewable sources of energy

(C) Conventional sources of energy

(D) Non-Conventional sources of energy

(E) Answer not known

பல்வேறு உபயோகங்களுக்கு பயன்படும் நமது பாரம்பரிய ஆற்றல் வளங்கள் ________ என்று அழைக்கப்படுகிறது.

(A) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள்

(B) புதுப்பிக்கவியலா ஆற்றல் மூலங்கள்

(C) மரபுசார் ஆற்றல் மூலங்கள்

(D) மரபு சாரா ஆற்றல் மூலங்கள்

(E) விடை தெரியவில்லை

150. Assertion : Polytene Chromosome contain about 1000 DNA molecules caused by duplication of chromosomes

Reason : They are found in the growing oocytes of most animals except mammals

(A) Assertion and Reason are correct

(B) Assertion is correct but Reason is wrong

(C) Assertion and Reason are wrong

(D) Assertion is correct but Reason is not the correct explanation

(E) Answer not known

கூற்று : பாலிடீன் குரோமோசோம் 1000 டி.என்.ஏ மூலக்கூறுகளை கொண்டவை. குரோமோசோம்கள் இரட்டிப்படைதலினால் ஏற்படுகிறது.

காரணம் : பாலூட்டிகளைத் தவிர, இவை பெரும்பாலான வளர்கின்ற விலங்குகளின் முட்டைகளில் காணப்படுகிறது.

(A) கூற்று மற்றும் காரணம் சரி

(B) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

(C) கூற்று மற்றும் காரணம் தவறு

(D) கூற்று சரி ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

151. The pesticide which is banned in Kerala and Karnataka is

(A) Gammexane

(B) Naphthalene

(C) Endosulphan

(D) Ethylene dibromide

(E) Answer not known

கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ள பூச்சிக் கொல்லி எது?

(A) காமாக்சேன்

(B) நாப்தலீன்

(C) எண்டோசல்பான்

(D) எத்திலீன் டைபுரோமைடு

(E) விடை தெரியவில்லை

152. Man-made sources of pollutants are called as

(A) Anthropogenic pollutants
(B) Industrial pollutants
(C) Leather Industry pollutants
(D) Cement Industry pollutants
(E) Answer not known

மனிதனால் உருவாக்கப்படும் மாசுக்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) மானுடவியல் மாசுக்கள்
(B) தொழிற்சாலை மாசுக்கள்
(C) தோல் தொழிற்சாலை மாசுக்கள்
(D) சிமெண்ட் தொழிற்சாலை மாசுக்கள்
(E) விடை தெரியவில்லை

153. Match the following lakes with their belonging states.

(a) Kolleru Lake — 1. Rajasthan
(b) Loktak Lake — 2. Kerala
(c) Sambhar Lake — 3. Manipur
(d) Sasthamkotta Lake — 4. Andhra Pradesh

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) Answer not known

பின்வரும் ஏரிகளை அவற்றின் மாநிலங்களுடன் பொருத்துக.

(a) கொல்லேரு ஏரி — 1. ராஜஸ்தான்
(b) லோக்டாக் ஏரி — 2. கேரளா
(c) சாம்பார் ஏரி — 3. மணிப்பூர்
(d) சாஸ்தம் கோட்டா ஏரி — 4. ஆந்திரப் பிரதேசம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

154. Match the following railway zones with their Headquarters.

| | Railway Zone | | Head Quarters |
|---|---|---|---|
| (a) | South eastern | 1. | Bhubaneswar |
| (b) | South central | 2. | Jabalpur |
| (c) | East Coast | 3. | Kolkatta |
| (d) | West central | 4. | Secundrabad |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known

பின்வரும் ரயில்வே மண்டலங்களை அவற்றின் தலைமையகத்துடன் பொருத்தவும்.

| | மண்டலம் | | தலைமையகம் |
|---|---|---|---|
| (a) | தென்கிழக்கு | 1. | புவனேஸ்வர் |
| (b) | தெற்கு மத்திய | 2. | ஜபல்பூர் |
| (c) | கிழக்கு கடற்கரை | 3. | கொல்கத்தா |
| (d) | மேற்கு மத்திய | 4. | செகந்திராபாத் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

155. Which of the following statements are true about Indian National Congress?

(i) Many Indians had been planning to form an all Indian organisation of Nationalist political workers. But the credit for giving the idea concrete and final shape goes to A.O. Hume.

(ii) The First session of the Indian National Congress at calcutta in December 1885

(iii) It was presided over by W.C. Banerjee

(A) (i) only

(B) (i) and (iii)

(C) (i) and (ii)

(D) (ii) and (iii)

(E) Answer not known

இந்திய தேசிய காங்கிரஸ் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) அனைத்து இந்திய சங்கங்களையும், தேசிய அரசியல் சங்கங்களின் கீழ் ஒன்றிணைக்க பல இந்தியர்கள் முற்பட்டனர். ஆனால் அதற்கு இறுதி வடிவம் கொடுத்த பெருமை A.O. ஹியூம்மையைச் சாரும்.

(ii) இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்டம் 1885 டிசம்பர் மாதத்தில் கல்கத்தாவில் நடைபெற்றது.

(iii) இது W.C. பானர்ஜி தலைமையில் நடைபெற்றது

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii)

(C) (i) மற்றும் (ii)

(D) (ii) மற்றும் (iii)

(E) விடை தெரியவில்லை

156. (1) Radhakanta Deb – First president of the British Indian Association

(2) Gazulu Lakshminarasu Chetty – Founder of the Madras Native Association

(3) Surendranath Banerjee – Founder of the Indian Association

Which of the above pair is/are correctly matched?

(A) (1) only

(B) (1) and (3) only

(C) (2) and (3) only

(D) (1), (2) and (3)

(E) Answer not known

(1) ராதாகாந்தா தேப் – பிரிட்டிஷ் இந்திய சங்கத்தின் முதல் தலைவர்

(2) கஜீலு லெக்சுமினரசு செட்டி – சென்னை வாசிகள் சங்கம்

(3) சுரேந்திரநாத் பானர்ஜி – இந்திய சங்கத்தின் நிறுவனர்

மேலே கொடுக்கப்பட்டுள்ள இணைகளில் சரியான(து)/வை எவை?

(A) (1) மட்டும் சரி

(B) (1) மற்றும் (3) மட்டும் சரி

(C) (2) மற்றும் (3) மட்டும் சரி

(D) (1), (2) மற்றும் (3) அனைத்தும் சரி

(E) விடை தெரியவில்லை

157. Assertion and Reason type :

Assertion [A] : Roberto-de-Nobili, whose linguistic ability enabled him to write extensively in Tamil and Sanskrit. He was considered the father of Tamil prose.

Reason [R] : Portuguese sent their Roman catholic priests who converted thousands of fishermen to the catholic religion.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(C) [A] is false [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று மற்றும் காரண வகை :

கூற்று [A] : இராபர்டோ டி நொபிலியின் மொழித்திறன் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் விரிவாக எழுத உதவியது. இவர் தமிழ் உரைநடையின் தந்தையெனக் கருதப்படுகிறார்.

காரணம் [R] : போர்த்துகீசியர் தங்களது ரோமன் கத்தோலிக்க குருமார்களைக் கீழை நாடுகளுக்கு அனுப்பி ஆயிரக்கணக்கான பரதவர்களை கத்தோலிக்க கிறித்தவ மதம் ஏற்கச் செய்தனர்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R], [A] க்கு சரியான விளக்கம்

(C) [A] தவறு [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R], [A] க்கு சரியான விளக்கம் இல்லை என்பது சரி

(E) விடை தெரியவில்லை

158. Which one of the book tells us the clear distinction between Amatyas and Ministers in Gupta Empire?

(A) Kamandaka Niti Shastra (B) Katyayana Smriti

(C) Narasingha Purana (D) Markandeya Purana

(E) Answer not known

குப்தர்களின் ஆட்சிகாலத்தில் அமாத்யாக்களுக்கும், மந்திரிகளுக்கும் இடையிலான தெளிவான வேறுபாட்டை பின்வருவனவற்றுள் எந்த நூல் கூறுகிறது?

(A) கமண்டக நிதி சாஸ்திரம் (B) கட்டயானா ஸ்மிருதி

(C) நரசிங்க புராணம் (D) மார்கண்டேய புராணம்

(E) விடை தெரியவில்லை

159. Match the following Indus Valley sites :

| | | | |
|---|---|---|---|
| (a) | Daimabad | 1. | Gujarat |
| (b) | Bhagatray | 2. | Rajasthan |
| (c) | Ropar | 3. | Maharashtra |
| (d) | Kalibangan | 4. | Punjab |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) Answer not known

பின்வரும் சிந்து சமவெளி தளங்களை சரியாகப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | டைமாபாத் | 1. | குஜராத் |
| (b) | பகத்ரே | 2. | இராஜஸ்தான் |
| (c) | ருபார் | 3. | மகாராஷ்டிரா |
| (d) | காளிபங்கன் | 4. | பஞ்சாப் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

160. Which of the following propositions were laid down by the Supreme Court with respect to the doctrine of prospective over ruling?

(i) It can be invoked only in matters arising under the Constitution.

(ii) It can be applied only by the Supreme Court.

(iii) It overrules an old precedent retrospectively.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

பின்னுற இயங்குதல் நிராகரித்தல் கோட்பாட்டின்படி உச்சநீதிமன்றம் விதித்துள்ள பின்வரும் கூற்றுகளில் எவை சரியானது?

(i) அரசமைப்புச் சட்டம் தொடர்பான விஷயங்களில் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.

(ii) உச்சநீதிமன்றம் மட்டுமே இக்கோட்பாட்டினை செயல்படுத்தும்.

(iii) முன்மேவுத் தன்மையுடன் முந்தைய வழக்கின் முடிவினை மறுதலிக்கும்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

161. "Of all checks on Democracy, federalism has been the most efficacious and the most congenial. The federal system limits and restrains the sovereign power by dividing it and by assigning to the Government only certain defined rights". This was said by

(A) Lord Bryce
(B) Lord Acton
(C) A.V. Dicey
(D) K.C. Wheare
(E) Answer not known

"மக்களாட்சியின் மீதான அனைத்து கட்டுப்பாட்டு முறைகளிலும், கூட்டாட்சி மிகவும் பயனுள்ளதாகவும், இணக்கமாகவும் இருந்து வருகிறது. கூட்டாட்சி முறையில் இறையாண்மை அதிகாரத்தைப் பிரிப்பதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்தி வரையறுப்பதுடன் அரசாங்கத்திற்கு சில வரையறுக்கப்பட்ட உரிமைகளை மட்டுமே வழங்குகிறது" எனக் கூறியவர்.

(A) பிரைஸ் பிரபு
(B) ஆக்டன் பிரபு
(C) A.V. டைசி
(D) K.C. வியர்
(E) விடை தெரியவில்லை

162. Match the correct answer :

(a) Article 243-D — 1. Audit of accounts of Panchayats
(b) Article 243-E — 2. Elections of the Panchayats
(c) Article 243-J — 3. Reservation of Seats
(d) Article 243-K — 4. Duration of Panchayats

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) Answer not known

சரியானவற்றை பொருத்துக :

(a) உறுப்பு 243-D — 1. ஊராட்சிகளின் கணக்குகள் தணிக்கை
(b) உறுப்பு 243-E — 2. ஊராட்சிகளுக்கான தேர்தல்கள்
(c) உறுப்பு 243-J — 3. இட ஒதுக்கீட்டு இடங்கள்
(d) உறுப்பு 243-K — 4. ஊராட்சிகளின் பதவிக்காலம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

163. Consider the following statements, choose the correct statement.

(i) The governor is neither directly elected by the people, nor indirectly elected by electoral college

(ii) Office of the governor is the independent constitutional office

(iii) The governor is the chief executive head of the government

(iv) The advocate general of the state is the part of the state judiciary

(A) (i) and (ii) only correct

(B) (ii) and (iii) only correct

(C) (i) and (iii) only correct

(D) (iii) and (iv) only correct

(E) Answer not known

கீழ்கண்ட வாக்கியங்களை கருதுக, சரியான விடையை தேர்ந்தெடுக்க.

(i) ஆளுநர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை, மறைமுகமாகவும் தேர்தல் குழுவினால் தேர்ந்தெடுக்கபடுவதுமில்லை

(ii) ஆளுநர் அலுவலகமானது அரசியலமைப்பு அடிப்படையிலான சுதந்திரமானதாகும்

(iii) ஆளுநர் அரசாங்கத்தின் தலைமை செயல் அலுவலர் ஆவார்

(iv) மாநிலத்தின் தலைமை வழக்கறிஞர் மாநில நீதித்துறையின் ஒரு அங்கமாவார்

(A) (i) மற்றும் (ii) மட்டும் சரி

(B) (ii) மற்றும் (iii) மட்டும் சரி

(C) (i) மற்றும் (iii) மட்டும் சரி

(D) (iii) மற்றும் (iv) மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

164. Which among the following is correct, considering the Fundamental Rights given under the Indian Constitution?

(i) It acts as limitations upon the Powers of the Executive and Legislature.

(ii) It Confers Powers upon the Executive and Legislature.

(iii) Fundamental Rights originates from the Judiciary.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only
(E) Answer not known

அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அடிப்படை உரிமைகள் குறித்து கீழ்கண்டவற்றுள் எது/எவை சரி?

(i) நிர்வாகம் மற்றும் சட்டம் இயற்றுத்துறையின் அதிகாரங்களுக்கு வரம்புகளாக உள்ளன.

(ii) நிர்வாகம் மற்றும் சட்டம் இயற்றுத்துறை ஆகியவற்றிற்கு அதிகாரமளிக்கின்றது.

(iii) அடிப்படை உரிமைகளின் ஊற்றுகண்ணாக நீதித்துறை உள்ளது.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்
(E) விடை தெரியவில்லை

165. Which of the following Articles deal with Directive principles of State Policy?

(A) Articles 51 to 76
(B) Articles 52 to 55
(C) Articles 38 to 51
(D) Articles 36 to 51
(E) Answer not known

பின்வரும் விதிகளில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை எந்த விதிகள் விவரிக்கிறது?

(A) விதிகள் 51 லிருந்து 76
(B) விதிகள் 52 லிருந்து 55
(C) விதிகள் 38 லிருந்து 51
(D) விதிகள் 36 லிருந்து 51
(E) விடை தெரியவில்லை

166. The words secular, socialist, integrity were added in the preamble through, which of the following amendments?

(A) 42nd Amendment of the Constitution
(B) 44th Amendment of the Constitution
(C) 105th Amendment of the Constitution
(D) 88th Amendment of the Constitution
(E) Answer not known

முன்னுரையில் காணப்படும் 'மதசார்பற்ற', 'சோசலிச', 'ஒருமைப்பாடு' போன்ற சொற்கள் எத்தனையாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

(A) 42 வது அரசியலமைப்பு சட்டதிருத்தம்
(B) 44 வது அரசியலமைப்பு சட்டதிருத்தம்
(C) 105 வது அரசியலமைப்பு சட்டதிருத்தம்
(D) 88 வது அரசியலமைப்பு சட்டதிருத்தம்
(E) விடை தெரியவில்லை

167. Justice party was formed in the year

(A) 1911 (B) 1912
(C) 1916 (D) 1922
(E) Answer not known

நீதிக்கட்சி உருவான ஆண்டு

(A) 1911 (B) 1912
(C) 1916 (D) 1922
(E) விடை தெரியவில்லை

168. The first Scheduled Caste leader from Tamil Nadu to represent Tamils in the Legislative council in 1920 was

(A) M.C. Rajah (B) R. Veeraiyan
(C) Chinnaswamy (D) Dr. Subbarayan
(E) Answer not known

1920ல் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதல் பட்டியலினத் தலைவர்

(A) எம்.சி. ராஜா (B) ஆர். வீரையன்
(C) சின்னசாமி (D) டாக்டர். சுப்பராயன்
(E) விடை தெரியவில்லை

169. Which Article of Indian Constitution prohibits the employment of children in any factory or mine or in any other hazardous occupation?

(A) Article 14
(B) Article 39
(C) Article 20
(D) Article 24
(E) Answer not known

இந்திய அரசியல் சட்டத்தின் எந்த சரத்து குழந்தைகளைத் தொழிற்சாலை, சுரங்கம் அல்லது எந்த ஆபத்தான தொழிலிலும் பணி அமர்த்தக் கூடாது எனக் கூறுகிறது?

(A) சட்டப்பிரிவு 14
(B) சட்டப்பிரிவு 39
(C) சட்டப்பிரிவு 20
(D) சட்டப்பிரிவு 24
(E) விடை தெரியவில்லை

170. The United Nations General Assembly adopted the Declaration on the Rights of Persons belonging to National (or) Ethnic, Religious and Linguistic Minorities on

(A) December 18, 1991
(B) December 18, 1992
(C) December 18, 1993
(D) December 18, 1994
(E) Answer not known

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை தேசிய அல்லது இனம், மதம் மற்றும் மொழி சார்ந்த சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்த பிரகடனத்தை ________ அன்று ஏற்றுக்கொண்டது.

(A) டிசம்பர் 18, 1991
(B) டிசம்பர் 18, 1992
(C) டிசம்பர் 18, 1993
(D) டிசம்பர் 18, 1994
(E) விடை தெரியவில்லை

171. Consider the following statements about 'The Protection of Children from Sexual Offences Act 2012'. Which among the following statement is correct?

(A) Punishment for pornographic offences shall not be less than 3 years

(B) Punishment for failure to report an offence is imprisonment upto 6 months with fine or both

(C) Punishment for abetment of an offence is 5 years

(D) Punishment for penetrative assault is 7 years

(E) Answer not known

குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO) குறித்து பின்வரும் அறிக்கைகளை கருத்தில் கொள்ளுங்கள். பின்வரும் எந்த அறிக்கை சரியானது?

(A) அசம்பாவிதமான புகைப்பட குற்றங்களுக்கான தண்டனை குறைந்தது 3 ஆண்டுகள்

(B) குற்றம் தொடர்பாக அறிக்கையிடத் தவறுவதற்கான தண்டனை 6 மாதங்கள் வரை சிறை மற்றும் அபராதம் அல்லது இரண்டும்

(C) குற்றத்திற்கு உதவியதற்கான தண்டனை 5 ஆண்டுகள்

(D) ஊடுருவும் பாலியல் தாக்குதலுக்கான தண்டனை 7 ஆண்டுகள்

(E) விடை தெரியவில்லை

172. Arrange the following stage of demographic transition in chronological order.

(1) Low birth rate and low death rate

(2) High birth rate and high death rate

(3) High birth rate and low death rate

(A) (1), (2), (3)

(B) (3), (2), (1)

(C) (2), (3), (1)

(D) (1), (3), (2)

(E) Answer not known

காலவரிசைப்படி, மக்கள்தொகை மாறுபாட்டின் பின்வரும் கட்டத்தை ஒழுங்குபடுத்தவும்.

(1) குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் குறைந்த இறப்பு விகிதம்

(2) அதிக பிறப்பு விகிதம் மற்றும் அதிக இறப்பு விகிதம்

(3) அதிக பிறப்பு விகிதம் மற்றும் குறைந்த இறப்பு விகிதம்

(A) (1), (2), (3)

(B) (3), (2), (1)

(C) (2), (3), (1)

(D) (1), (3), (2)

(E) விடை தெரியவில்லை

173. Name the state known as the Yarn Bowl of India.

(A) Tamil Nadu
(B) Gujarat
(C) Rajasthan
(D) Madhya Pradesh
(E) Answer not known

இந்தியாவின் நூல் கிண்ணம் என்று அழைக்கப்படும் மாநிலத்தின் பெயர்

(A) தமிழ்நாடு
(B) குஜராத்
(C) ராஜஸ்தான்
(D) மத்திய பிரதேஷ்
(E) விடை தெரியவில்லை

174. Sampoorna Grameen Roz-Gar Yojana (SGRY) is not relevant to

(A) It was launched in 2001
(B) It provides employment exclusively to women
(C) It provides wage employment to rural masses
(D) It is a central government scheme
(E) Answer not known

சம்பூர்ணா ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் கீழ்காணும் எவற்றுள் பொருந்தாது?

(A) 2001-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது
(B) இது பெண்களுக்கு பிரத்தியேகமாக வேலை வாய்ப்பை வழங்குகிறது
(C) ஊரக மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பது
(D) நடுவண் அரசின் திட்டம்
(E) விடை தெரியவில்லை

175. Which soil types of the south zone of Tamil Nadu?

(A) Coastal Alluvial and deep red soil
(B) Non-calcareous brown and calcareous black
(C) Deep red soil and non calcareous red
(D) Clay loam and red sandy loam
(E) Answer not known

தமிழ்நாட்டின் தென்மண்டலத்தில் எந்த வகையான மண் வகைகள் உள்ளன?

(A) கடலோர வண்டல் மண் மற்றும் நல்ல சிகப்பு மண்
(B) சுண்ணாம்பு இல்லாத பழுப்பு மற்றும் சுண்ணாம்பு கருப்பு மண்
(C) நல்ல சிகப்பு மண் மற்றும் சுண்ணாம்பு இல்லாத சிகப்பு மண்
(D) களிமண் மற்றும் செம்மண் கலந்த மணல்
(E) விடை தெரியவில்லை

176. By which of the following is minimum support prices determined?

(A) National Food Security Act (NFSA)
(B) Commission on Agriculture Costs and Prices (CACP)
(C) Agriculture Infrastructure Fund (AIF)
(D) National Academy of Agri. Sciences (NAAS)
(E) Answer not known

பின்வருவனவற்றின் எதன் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படுகிறது?

(A) தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்
(B) விவசாய செலவுகள் மற்றும் விலைகள் மீதான ஆணையம்
(C) விவசாய உள்கட்டமைப்பு நிதி
(D) தேசிய வேளாண் அறிவியல் கல்வி நிலையம்
(E) விடை தெரியவில்லை

177. Arrange the following in the chronological order.

(1) PQLI – Physical Quality Life Index

(2) MDGs – Millennium Development Goals

(3) HDI – Human Development Index

(4) SDGs – Sustainable Development Goals

(A) (1), (2), (3), (4)

(B) (1), (4), (3), (2)

(C) (1), (3),(2), (4)

(D) (4), (3), (2), (1)

(E) Answer not known

பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி ஒழுங்குபடுத்தவும்.

(1) PQLI – உடல் வாழ்க்கை தர குறியீடு

(2) MDGs – புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள்

(3) HDI – மனித வளர்ச்சிக் குறியீடு

(4) SDGs – நிலையான வளர்ச்சி இலக்குகள்

(A) (1), (2), (3), (4)

(B) (1), (4), (3), (2)

(C) (1), (3),(2), (4)

(D) (4), (3), (2), (1)

(E) விடை தெரியவில்லை

178. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | The Fourth Finance Commission Chairman of India | 1. | N.K.P. Salve |
| (b) | The Sixth Finance Commission Chairman of India | 2. | C.Rangarajan |
| (c) | The Ninth Finance Commission Chairman of India | 3. | P.V. Rajamannar |
| (d) | The Twelfth Finance Commission Chairman of India | 4. | K. Brahmananda Reddi |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) Answer not known

பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இந்தியாவின் நான்காவது நிதிக்குழுத் தலைவர் | 1. | N.K.P. சால்வ் |
| (b) | இந்தியாவின் ஆறாவது நிதிக்குழுத் தலைவர் | 2. | C. ரங்கராஜன் |
| (c) | இந்தியாவின் ஒன்பதாவது நிதிக்குழுத் தலைவர் | 3. | P.V. ராஜமன்னார் |
| (d) | இந்தியாவின் பன்னிரெண்டாவது நிதிக்குழுத் தலைவர் | 4. | K. பிரம்மனந்தா ரெட்டி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

179. "My Experience as a legislator" was written by

(A) Raja Gopalachariar

(B) Dr. Muthulakshmi Reddy

(C) E.V.Ramaswamy

(D) Annadurai

(E) Answer not known

"ஒரு சட்டமன்ற உறுப்பினராக எனது அனுபவம்" என்ற நூலை எழுதியவர்

(A) இராஜ கோபாலாசாரியார்

(B) டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி

(C) ஈ.வி. ராமசாமி

(D) அண்ணாதுரை

(E) விடை தெரியவில்லை

180. Name the person who delivered speech in Tamil Firstly at the Third session of the Indian National Congress held at Madras.

(A) Thanjai R. Ramaswami Pillai

(B) G. Subramania Iyer

(C) M. Viraraghavachariar

(D) Rao Saheb Mukkananchari

(E) Answer not known

பின்வருவனவற்றுள் சென்னையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது கூட்டத்தில் தமிழில் முதன்முதலாக பேசியவர் யார்?

(A) தஞ்சை ஆர். இராமசாமி பிள்ளை

(B) ஜி. சுப்ரமணிய ஐயர்

(C) எம். வீரராகவாச்சாரியார்

(D) ராவ் சாகிப் முக்கானன்சாரி

(E) விடை தெரியவில்லை

181. Reason and Assertion Type :

Assertion [A] : TamilNadu has long resisted the imposition of Hindi in Government schools hence refused to join the Prime Minister Schools for Rising India. (PMSRI). Hence Union Government has withheld funds under the Samagra Shiksha Scheme (SSS).

Reason [R] : Though the Union government rightly acknowledged government of Tamil Nadu's Two language policy and its impact on National Level yet through New Education Policy of 2020 it wants to have its say on the subjects of concurrent List, which is being staunchly opposed and viewed as against the concept of federal system of administration by the government of Tamil Nadu.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]
(E) Answer not known

கூற்று மற்றும் காரணம் வகை :

கூற்று : அரசு பள்ளிகளில் இந்தித் திணிப்பை தமிழ்நாடு நீண்ட காலமாக எதிர்த்து வருகிறது. மேலும் எழுச்சி பெறும் இந்தியாவிற்கான பிரதம மந்திரி பள்ளிகளில் இணைய மறுத்துவிட்டது. எனவே ஒன்றிய அரசு சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் நிதியை நிறுத்தி வைத்துள்ளது.

காரணம் : தமிழக அரசின் இரு மொழி கொள்கையையும் மற்றும் தேசிய அளவில் அது ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தையும் மத்திய அரசு சரியாக அங்கீகரித்தாலும், 2020 ஆம் ஆண்டின் புதிய கல்விக் கொள்கையின் மூலம் அது பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ள துறைகளில் தனது பங்களிப்பை வழங்க விரும்புகிறது. இது தமிழக அரசால் கூட்டாட்சி நிர்வாக முறை என்ற கருத்திற்கு எதிரானதாகக் கருதப்பட்டு கடுமையாக எதிர்க்கப்படுகிறது.

(A) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
(B) கூற்றும் காரணமும் சரி, ஆயினும் காரணமே கூற்றிற்கான சரியான விளக்கம்
(C) கூற்று தவறு, காரணம் சரி
(D) கூற்றும் காரணமும் சரி ஆயினும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
(E) விடை தெரியவில்லை

182. Which of the following statements are true about the Vellore mutiny?

1. Sir John Crawdock was the commander-in-chief of the Chennai Army.

2. Sir George Barlow was the Governor of Chennai.

3. Lord William Bending was the Governor General of India.

4. Major Payers was appointed as the Discipline trainer for the soldiers.

(A) 1, 4 is true

(B) 1, 2 is true

(C) 1, 2, 3 is true

(D) 1, 3 is true

(E) Answer not known

வேலூர் கலகத்தைப் பற்றி பின்வரும் கூற்றுகளில் எவை உண்மை?

1. சென்னை இராணுவப் படைகளின் தலைமைத் தளபதியாக சர் ஜான் கிரோடக் இருந்தார்.

2. சென்னை ஆளுநராக சர் ஜார்ஜ் பர்லோ இருந்தார்.

3. இந்தியத் தலைமை ஆளுநராக வில்லியம் பெண்டிங் பிரபு இருந்தார்.

4. இராணுவ வீரர்களின் சீரான விதிகள் வகுக்க மேஜர் பையர்ஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

(A) 1, 4 சரி

(B) 1, 2 சரி

(C) 1, 2, 3 சரி

(D) 1, 3 சரி

(E) விடை தெரியவில்லை

183. Choose the right answer among type.

"Think first and then venture on an act
To venture and then think is a fault"

As per the above Thirukkural, how should we enter an action?

(i) Act after a mature thought

(ii) Act after accumulating enormous wealth

(iii) Act at an appropriate time

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (i) and (iii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியானதைத் தேர்வு செய்க.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு". –

இக்குறளில் ஒரு செயலில் எவ்வாறு ஈடுபட வேண்டும் எனத் திருவள்ளுவர் அறிவுறுத்துகிறார்?

(i) நன்றாகச் சிந்தித்து அதற்குப் பிறகு செயல்பட வேண்டும்.

(ii) மிகுந்த பொருள் சேர்த்த பிறகு செயல்பட வேண்டும்.

(iii) தக்க காலமறிந்து செயல்பட வேண்டும்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

184. The Thirukkural mentions the following as qualifications for a king.

(i) An army, people

(ii) Guards the realm justly and maintains justice

(iii) Wealth creation, wealth builts

(iv) As a king like a robber

(A) (i) only

(B) (i), (ii) and (iii)

(C) (i), (iv) only

(D) (iv) only

(E) Answer not known

அரசருக்குரிய தகுதிப் பேறுகளாக திருக்குறள் எவற்றைக் குறிப்பிடுகின்றன?

(i) படை, குடி

(ii) முறை செய்து காத்தல்

(iii) இயற்றல், ஈட்டல்

(iv) வேலொடு நின்றான் போல கோலோடு நிற்றல்

(A) (i) மட்டும்

(B) (i), (ii) மற்றும் (iii)

(C) (i), (iv) மட்டும்

(D) (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

185. "Kadukai thulaithaezh kadalaip pukatik kuruga thariththa kural" who said this?

(A) Avaiyar
(B) Nakkeerar
(C) Eadaikkadar
(D) Arisilkizhar
(E) Answer not known

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" – எனப்பாடியவர் யார்?

(A) ஔவையார்
(B) நக்கீரர்
(C) இடைக்காடர்
(D) அரிசில்கிழார்
(E) விடை தெரியவில்லை

186. Match :

(a) K. Vellaivaranar — 1. BC From 4 to 3
(b) K. Kanagasabapathy Pillai — 2. BC 5320
(c) N. Subramaniyan — 3. AD 4
(d) S. Vaiyapuri Pillai — 4. BC 2

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) Answer not known

பொருத்துக :

(a) க. வெள்ளைவாரணர் — 1. கி.மு. 4 ஆம் நூற்றாண்டு முதல் 3 ஆம் நூற்றாண்டு வரை
(b) கே. கனகசபாபதிப் பிள்ளை — 2. கி. மு. 5320
(c) என். சுப்பிரமணியன் — 3. கி. பி. 4 ஆம் நூற்றாண்டு
(d) எஸ். வையாபுரிப் பிள்ளை — 4. கி. மு. 2 ஆம் நூற்றாண்டு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

187. Who is called as "Vedam Tamil Seitha Maaran"?

(A) Periyazhvar
(B) Nammazhvar
(C) Thirumangaiazhvar
(D) Aandal
(E) Answer not known

"வேதம் தமிழ் செய்த மாறன்" – யார்?

(A) பெரியாழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) திருமங்கையாழ்வார்
(D) ஆண்டாள்
(E) விடை தெரியவில்லை

188. Assertion [A] : Jainism books Kiliviruthum, Eliviruthum, Nari Viruthum written in 5th century A.C.

Reason [R] : The Books proclaims "Yaakai Nilayammai and Selvam Nilayammai".

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]
(E) Answer not known

கூற்று [A] : கி.பி. 5ம் நூற்றாண்டில் கிளிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம் முதலிய சமணசமய நூல்கள் இயற்றப்பட்டன.

காரணம் [R]: இவை யாக்கை நிலையாமையையும் செல்வம் நிலையாமையையும் எடுத்துரைத்தன

(A) [A] சரியானது ஆனால் [R] தவறானது
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரியானது. மேலும் [R] ஆனது [A]விற்கான சரியான விளக்கம்
(C) [A] தவறானது [R] சரியானது
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரியானது. ஆனால் [R] ஆனது [A]விற்கான சரியான விளக்கம் அல்ல
(E) விடை தெரியவில்லை

189. A, B, C completed a work costing Rs. 1,800. A worked for 6 days, B for 4 days and C for 9 days. If their daily wages are in the ratio 5 : 6 : 4. The amount received by A is

(A) Rs. 700 (B) Rs. 800

(C) Rs. 600 (D) Rs. 900

(E) Answer not known

A, B, மற்றும் C ஆகிய மூவரும் ஒரு வேலையை ரூ. 1,800 க்கு முடிக்கின்றனர். A அந்த வேலையை 6 நாட்களிலும், B - 4 நாட்களிலும் மற்றும் C - 9 நாட்களிலும் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய தினக்கூலிகளின் விகிதம் 5 : 6 : 4, எனில், A பெற்ற தொகை

(A) ரூ. 700 (B) ரூ. 800

(C) ரூ. 600 (D) ரூ. 900

(E) விடை தெரியவில்லை

190. The volume of a solid right circular cone is $11088\,cm^2$. If its height is 24 cm, then find the radius of the cone.

(A) 23 cm (B) 20 cm

(C) 22 cm (D) 21 cm

(E) Answer not known

ஒரு நேர் வட்டக்கூம்பின் கனஅளவு 11088 ச.செ.மீ. ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ, எனில், அதன் ஆரம் காண்க.

(A) 23 செ.மீ (B) 20 செ.மீ

(C) 22 செ.மீ (D) 21 செ.மீ

(E) விடை தெரியவில்லை

191. Find the principal if the difference between C.I and S.I on it at 8% p.a. for 2 years is Rs. 240

(A) Rs. 48,400
(B) Rs. 37, 500
(C) Rs. 41,300
(D) Rs. 27,500
(E) Answer not known

8% ஆண்டு வட்டியில் 2 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ரூ. 240 எனில் அசலைக் காண்க.

(A) ரூ. 48,400
(B) ரூ. 37, 500
(C) ரூ. 41,300
(D) ரூ. 27,500
(E) விடை தெரியவில்லை

192. At what time will Rs. 17,000 will increase Rs. 18,200 at 7% per annum?

(A) $1\frac{1}{117}$ years
(B) $1\frac{1}{118}$ years
(C) $1\frac{1}{119}$ years
(D) $1\frac{101}{119}$ years
(E) Answer not known

எத்தனை ஆண்டுகளில் ரூ. 17,000 ஆண்டுக்கு 7% தனிவட்டி வீதத்தில் ரூ. 18,200 ஆக உயரும்?

(A) $1\frac{1}{117}$ ஆண்டுகள்
(B) $1\frac{1}{118}$ ஆண்டுகள்
(C) $1\frac{1}{119}$ ஆண்டுகள்
(D) $1\frac{101}{119}$ ஆண்டுகள்
(E) விடை தெரியவில்லை

193. Find the L.C.M of the given expression $27\,l\,m^2n$ , $81\,m^2n^2$, $9\,l^3m^4$

(A) $27l\,m^2n$
(B) $81\,l^3m^4n^2$
(C) $81\,l^3m^2n$
(D) $9l^2m^3n$
(E) Answer not known

$27\,l\,m^2n$, $81\,m^2n^2$ மற்றும் $9\,l^3m^4$ ஆகிய கோவைகளின் மீ.பொ.ம காண்க

(A) $27l\,m^2n$
(B) $81\,l^3m^4n^2$
(C) $81\,l^3m^2n$
(D) $9l^2m^3n$
(E) விடை தெரியவில்லை

194. What is the greatest possible volume of a vessel that can be used to measure exactly the volume of milk in cans in full capacity of 80 litres, 100 litres and 120 litres?

(A) 40 litres
(B) 30 litres
(C) 10 litres
(D) 20 litres
(E) Answer not known

முழுவதுமாக நிரப்பப்பட்டுள்ள 80 லிட்டர், 100 லிட்டர் மற்றும் 120 லிட்டர் கொள்ளளவு உள்ள கலன்களில் பாலினைச் சரியாக அளக்கக்கூடிய பாத்திரத்தின் அதிகபட்சக் கொள்ளளவு என்ன?

(A) 40 லிட்டர்
(B) 30 லிட்டர்
(C) 10 லிட்டர்
(D) 20 லிட்டர்
(E) விடை தெரியவில்லை

195. Find the missing letters in the series

KJI, MLK, ONM.,? SRQ, UTS

(A) PQR
(B) QOP
(C) QPO
(D) ONP
(E) Answer not known

கொடுக்கப்பட்டுள்ள தொடரில் விடுபட்ட எழுத்துகளைக் காண்க.

KJI, MLK, ONM.,? SRQ, UTS

(A) PQR
(B) QOP
(C) QPO
(D) ONP
(E) விடை தெரியவில்லை

196. Find out the missing number in the series given below.

$1, \frac{5}{2}, \frac{10}{3}, \frac{17}{4}, ______$

(A) $\frac{26}{5}$
(B) $\frac{24}{5}$
(C) $\frac{21}{5}$
(D) 5
(E) Answer not known

பின்வரும் தொடரில் உள்ள விடுபட்ட எண்ணைக் காண்க

$1, \frac{5}{2}, \frac{10}{3}, \frac{17}{4}, ______$

(A) $\frac{26}{5}$
(B) $\frac{24}{5}$
(C) $\frac{21}{5}$
(D) 5
(E) விடை தெரியவில்லை

197. What is the probability that a leap year selected at random will contain 53 Sundays?

(A) 2/7 (B) 4/7

(C) 3/7 (D) 1/7

(E) Answer not known

ஒரு நெட்டாண்டில் 53 ஞாயிற்றுகிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு காண்க.

(A) 2/7 (B) 4/7

(C) 3/7 (D) 1/7

(E) விடை தெரியவில்லை

198. How many days of the week start with 'T'?

(A) 2 (B) 3

(C) 4 (D) 1

(E) Answer not known

வாரத்தின் நாட்களை ஆங்கிலத்தில் சொல்லும் பொழுது எத்தனை நாட்கள் 'T' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும்?

(A) 2 (B) 3

(C) 4 (D) 1

(E) விடை தெரியவில்லை

199. AUDIO, ARISE, AWAKE, VIDEO, Find the Odd one?

(A) AUDIO (B) ARISE

(C) AWAKE (D) VIDEO

(E) Answer not known

AUDIO, ARISE, AWAKE, VIDEO இவற்றில் பொருத்தமற்றது எது?

(A) AUDIO (B) ARISE

(C) AWAKE (D) VIDEO

(E) விடை தெரியவில்லை

200. Find the missing element in the series given below.

ACE ? MOQ, SUW

(A) GIK (B) FHJ

(C) GHJ (D) GIL

(E) Answer not known

விடுபட்ட உறுப்பைக் காண்க.

ACE ? MOQ, SUW

(A) GIK (B) FHJ

(C) GHJ (D) GIL

(E) விடை தெரியவில்லை

## SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

## SPACE FOR ROUGH WORK

# CTSNI503GS/2025

*Register Number*

SEAL

**2025**

**Question Booklet**

## Part-A (Tamil Eligibility Test) (S.S.L.C. Standard), Part-B (General Studies) (Degree Standard) and Part-C (Aptitude and Mental Ability) (S.S.L.C Standard)

**Duration : Three Hours** **Total Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

---

### IMPORTANT INSTRUCTIONS

1. This question booklet contains **200** questions. You should not remove or tear off any sheet from this question booklet.
2. Answer all the questions. All questions carry equal marks.
3. Before shading the Question Booklet Series Number in the OMR answer sheet and answering the questions, you shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. <u>If any defect is noticed in the question booklet, it shall be reported to the Room invigilator before the commencement of the examination and candidate must get it replaced with another complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.</u>
4. You must write your register number in the space provided on the top right side of this page. Do not write anything else on the question booklet.
5. Each question comprises five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one correct answer, shade the one which you consider the best. **If you do not know the answer, you have to mandatorily shade (E).** In any case, you should choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the answers shaded by you happens to be correct.
6. You should not make any marking in the question booklet except in the space provided at the last pages of the question booklet, which can be used for rough work. This instruction should be strictly adhered to.
7. For questions in Sl.Nos. 101 to 200 (Part-B & Part-C), English version is final.
8. You are not allowed to take this question booklet and the answer sheet out of the examination room during the time of the examination.
9. After the examination is over, you must handover your answer sheet to the Room invigilator and you are allowed to take the question booklet with you.
10. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

---